winmeen.com

# மூன்றாம் வார நடப்பு நிகழ்வுகள்

## ஜூலை 2022

ஜூலை 15-21

**1. 'உலகளாவிய பாலின இடைவெளி' அறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?**

அ. ஐநா பெண்கள் அமைப்பு

**ஆ. உலகப் பொருளாதார மன்றம் ☑**

இ. பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஈ. உலக வங்கி

✓ 2022ஆம் ஆண்டிற்கான 'உலகளாவிய பாலின இடைவெளி' அறிக்கையினை உலகப் பொருளாதார மன்றம் (WEF) சமீபத்தில் வெளியிட்டது. ஐஸ்லாந்து (90.8%) உலக தரவரிசையில் முதலிடத்தில் உள்ளது. இந்தியா 146 நாடுகளில் 135ஆவது இடத்திலுள்ளது. கடந்த ஆண்டு, 156 நாடுகளில் இந்தியா 140ஆவது இடத்திலிருந்தது. அறிக்கையின்படி, உலகளாவிய பாலின இடைவெளியை சுழியத்திற்குக் கொண்டு வார இன்னும் 132 ஆண்டுகள் ஆகும்.

**2. 'I2U2' குழுமத்துடன் தொடர்புடைய நாடுகள் எவை?**



**அ. இந்தியா–இஸ்ரேல்–ஐக்கிய அரபு அமீரகம்–அமெரிக்கா ☑**

ஆ. இந்தியா–இஸ்ரேல்–ஐக்கிய பேரரசு–அமெரிக்கா

இ. இந்தியா–ஈரான்–ஐக்கிய அரபு அமீரகம்–அமெரிக்கா

ஈ. இந்தியா–ஈரான்– ஐக்கிய பேரரசு–அமெரிக்கா

✓ 2021 அக்டோபரில், நான்கு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் சந்திப்பின்போது 'I2U2' (இந்தியா–இஸ்ரேல்–ஐக்கிய அரபு அமீரகம்–அமெரிக்க ஐக்கிய நாடுகள்) குழுவானது கருத்தாக்கப்பட்டது. பிரதமர் மோடி தனக்கு நிகரான இஸ்ரேலிய பிரதிநிதி யாயர் லாபிட், ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைவர் முகமது பின் சயீத் அல் நஹ்யான் மற்றும் அமெரிக்க அதிபர் ஜோ பிடன் ஆகியோருடன் முதல் 'I2U2' தலைவர்களின் மெய்நிகர் உச்சிமாநாட்டில் பங்கேற்றார்.

**3. நடுவண் கலாச்சார அமைச்சகமானது 2022 – 'தம்மசக்கா நாள்' கொண்டாட்டங்களை கீழ்க்காணும் எந்த நகரத்தில் நடத்தியது?**

அ. வாரணாசி

**ஆ. சாரநாத் ☑**



இ. பாட்னா

ஈ. பெங்களூரு

✓ உத்தரபிரதேச மாநிலம் சாரநாத்தில், 2022ஆம் ஆண்டு தம்மசக்கா நாள் கொண்டாட்டத்தில் இந்தியக்குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் உரையாற்றினார். பன்னாட்டு பௌத்த கூட்டமைப்புடன் இணைந்து இந்தியாவின் கலாசார அமைச்சகம், 'அமுதப்பெருவிழாவின்' ஒருபகுதியாக 'ஆஷாத பூர்ணிமா' நாளைக் கொண்டாடுகிறது.

**4. தரங்கா மலையில் அமைந்துள்ள புனித சமணத் தீர்த்தங்கரர்களுள் ஒருவரான சமணர் அஜித்நாத்தின் கோவில், கீழ்க்காணும் எந்த மாநிலம்/யூனியன் பிரதேசத்தில் அமைந்துள்ளது?**

அ. மகாராஷ்டிரா



**ஆ. குஜராத் ☑**

இ. பீகார்

ஈ. உத்தரப்பிரதேசம்

✓ புனித சமணத் தீர்த்தங்கரர்களுள் ஒருவரான சமணர் அஜித்நாத்தின் கோவில், குஜராத் மாநிலத்தில் உள்ள தரங்கா மலையில் அமைந்துள்ளது. பொருளாதார விவகாரங்களுக்கான நடுவண் அமைச்சரவைக்குழு கூட்டத்தில், ரயில்வே

அமைச்சகத்தால் ₹2798.16 கோடி செலவில் மேற்கொள்ளப்படவுள்ள தரங்கா மாலை–அம்பாஜி–அபுசாலை புதிய இரயில்பாதை திட்டத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டது. 116.65 கிமீட்டர் தொலைவிற்கு அமைக்கப்படவுள்ள இந்தப் புதிய இரயில்பாதை பணிகள் 2026–27–க்குள் நிறைவேற்றி முடிக்கப்படும்.

**5. 'பாதுகாப்பான புகலிட மறுப்பு மீதான முனைவு' மற்றும் 'ஊழல் எதிர்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு குறித்த பயிலரங்கம்' முதலியவற்றுடன் தொடர்புடைய கூட்டமைப்பு எது?**

அ. G20

ஆ. ஐரோப்பிய ஒன்றியம்

**இ. BRICS ☑**

ஈ. ASEAN




✓ நடுவண் அமைச்சர் Dr ஜிதேந்திர சிங் சமீபத்தில் BRICS ஊழல் எதிர்ப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றினார். அப்போது FATFஇன் பணமோசடிக்கு எதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான நிதியியல் தரங்களை அமல்படு–த்துவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார். டாக்டர் ஜிதேந்திர சிங், 'பாதுகாப்பான புகலிட மறுப்பு மீதான முனைவின்' இறுதி வடிவங்குறித்து திருப்தி தெரிவித்ததோடு, 'ஊழல் எதிர்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு குறித்த BRICS பயிலரங்கில் தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார்.

**6. DRDOஆல் சமீபத்தில் சோதனை செய்யப்பட்ட High–speed Expendable Aerial Target (HEAT)இன் பெயர் என்ன?**

அ. ஆகாஷ்

**ஆ. அப்யாஸ் ☑**

இ. அக்ஷரா

ஈ. அப்சரா




✓ இந்தியா, உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட 'அப்யாஸ்' என்னும் High–speed Expendable Aerial Target (HEAT)ஐ வெற்றிகரமாக பரிசோதித்தது. ஒடிஸாவின் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை வரம்பில் இராணுவ ஆய்வு மற்றும் வளர்ச்சி அமைப்பு (DRDO) இந்தச் சோதனையை நடத்தியது. முன்னதாக, மகாராஷ்டிர மாநிலத்தில் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட பீரங்கி எதிர்ப்பு ஏவுகணையை DRDOஉம் இராணுவமும் வெற்றிகரமாக பரிசோதித்தன.

**7. இந்தியாவில், 'பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி (GST) நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ. பிப்ரவரி.01

ஆ. ஜூன்.01

**இ. ஜூலை.01 ☑**

ஈ. ஆகஸ்ட்.01




✓ பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி விதித்து ஐந்தாண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில் ஜூலை.1 அன்று GST நாள் கொண்டாடப்படுகிறது. இது 2017–இல் "ஒரு நாடு– ஒரு சந்தை– ஒரு வரி" என்ற கருத்துருவுடன் அறிமுகப்படுத்தப்பட்டது. GST என்பது பலகட்ட, மறைமுக நுகர்வு அடிப்படையிலான வரி அமைப்பாகும். இது சேவை வரி, மதிப்பு கூட்டப்பட்ட உள்நாட்டு மறைமுக வரிகளின் தொகுப்பை உள்ளடக்கியது.

**8. U23 ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் 2022–இல் வெண்கலப்பதக்கம் வென்ற இந்திய மல்யுத்த வீரர் யார்?**

**அ. தீபக் புனியா ☑** ஆ. இரவி குமார் தஹியா

இ. பஜ்ரங் புனியா ஈ. அன்ஷு மாலிக்



✓ கிர்கிஸ்தானின் பிஷ்கெக்கில் நடைபெற்ற U23 ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப்–2022–இல் 86 கிலோ 'பிரீஸ்டைல்' எடைப்பிரிவில் தீபக் புனியா வெண்கலம் வென்றார். 23 வயதான தீபக் புனியா, உஸ்பெகிஸ்தானின் அசிஸ்பெக் பைசுல்லயேவ் மற்றும் கிர்கிஸ்தானின் நூர்திலெக் கரிப்பேவ் ஆகியோரிடம் வீழ்ந்து வெண்கலப்பதக்கத்தை தட்டிச் சென்றார். 23 வயதுக்குட்பட்டோருக்கான இந்தப் போட்டியில் இந்தியா 10 தங்கப்பதக்கங்கள் உட்பட மொத்தம் 25 பதக்கங்களை வென்றது.

**9. ஆசிய பசிபிக் நிலைத்தன்மை குறியீடு–2021–இல் 'தங்கம்' தரநிலைப்பிரிவை எட்டிய ஒரே இந்திய நகரம் எது?**

அ. சென்னை

**ஆ. பெங்களூரு ☑**

இ. மும்பை

ஈ. ஹைதராபாத்



✓ ஆசிய பசிபிக் நிலைத்தன்மை குறியீடு–2021இன்படி, பெங்களூரு, தில்லி, ஹைதராபாத் மற்றும் மும்பை ஆகிய 4 இந்திய நகரங்கள் முதல் இருபது நிலையான நகரங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. நைட் பிராங்கின் APAC நிலையான நகரங்களின் குறியீடு நகரமயமாக்கல் அழுத்தம், காலநிலை இடர், $CO_2$ உமிழ்வு ஆகியவற்றின் அடிப்படையில் முப்பத்தாறு நகரங்களை மதிப்பிட்டுள்ளது. சிங்கப்பூர், சிட்னி, வெலிங்டன், பெர்த் மற்றும் மெல்போர்ன் ஆகியவை பசுமைத் தரப்படுத்தப்பட்ட முதல் ஐந்து நகரங்கள் ஆகும். பிராந்தியத்தில் 14ஆம் இடத்தில் உள்ள பெங்களூரு, 'தங்கம்' என்ற தரநிலையை எட்டிய ஒரே இந்திய நகரமாகும்.

**10. இந்தியாவின் நல்வாழ்வுத்துறைக்கு உதவும் நோக்கில் தலா $500 மில்லியன் டாலர்கள் மதிப்பிலான இரண்டு கடன்களை அறிவித்துள்ள நிறுவனம் எது?**

அ. ஆசிய வளர்ச்சி வங்கி

ஆ. ஆசிய உட்கட்டமைப்பு & முதலீட்டு வங்கி

**இ. உலக வங்கி ☑**

ஈ. HDFC வங்கி

✓ இந்தியாவின் நலவாழ்வுத்துறைக்கு உதவும் நோக்கில் தலா $500 மில்லியன் டாலர்கள் மதிப்புடைய இரண்டு கூடுதல் கடன்களை வழங்கவுள்ளதாக உலக வங்கி அறிவித்துள்ளது. இந்த $1 பில்லியன் டாலர் நிதியுதவியின் மூலம், இந்தியாவின் முதன்மையான பிரதம மந்திரி–ஆயுஷ்மான் பாரத் சுகாதார உட்கட்டமைப்பு இயக்கத்திற்கு (PM–ABHIM) உதவ இயலும். இவ்விரு கடன்களுள் ஒன்று தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், கேரளா, மேகாலயா, ஒடிஸா, பஞ்சாப் மற்றும் உத்தரபிரதேசம் உள்ளிட்ட ஏழு மாநிலங்களுக்கு அளிக்கப்படும்.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வேதி உரங்களுக்குப் பதிலாக 'நானோ உரங்கள்' பயன்பாடு: மன்சுக் மாண்டவியா வலியுறுத்தல்**

'வேதி உரங்களுக்குப் பதிலாக முழுவதும் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட 'நானோ உரங்கள்' பயன்பாட்டை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த வேண்டும்' என்று மத்திய வேதி மற்றும் உரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டார்.

மாநில வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை அமைச்சர்களின் தேசிய மாநாடு பெங்களூருவில் நடைபெற்றது. மாநாட்டின் தொடக்க விழாவில் பங்கேற்ற மத்திய அமைச்சா் மன்சுக் மாண்டவியா பேசியதாவது:

உலக அளவிலான உரப்பயன்பாட்டில் இந்தியாவின் பங்கு மட்டும் 35 சதவீதமாகும். ஒவ்வோர் ஆண்டும் 70 லட்சம் முதல் 100 லட்சம் மெட்ரிக் டன் உரங்களை இந்தியா இறக்குமதி செய்கிறது.

**₹350 கோடி நானோ உர ஆலைக்கு அடிக்கல்:** பெங்களூரில் இந்திய விவசாயிகள் உர கூட்டுறவு நிறுவனம் சார்பில் ₹350 கோடி முதலீட்டில் அமைக்கப்படும் நானோ உர (திரவம்) ஆலைக்கு கர்நாடக முதல்வர் பசவராஜ் பொம்மை அடிக்கல் நாட்டினார். தென்னிந்தியாவில் அமைக்கப்படும் முதல் நானோ உர ஆலை இதுவாகும்.

ஆண்டுக்கு தலா 500 மில்லி லிட்டர் அளவுகொண்ட 34 கோடி நானோ உர பாட்டில்களை தயாரிக்கும் திறனுடன் அமைக்கப்படும் இந்த ஆலை அமைக்கும் திட்டம் 15 மாதங்களில் நிறைவடையும் என இஃப்கோ தெரிவித்துள்ளது. நாடு முழுவதும் இதுபோன்ற மேலும் 8 ஆலைகளை அமைக்கவும் இஃப்கோ திட்டமிட்டுள்ளது.

---

**2. துப்பாக்கி சுடுதல்: இந்தியா முதலிடம்**

தென் கொரியாவில் நடைபெற்ற ஐஎஸ்எஸ்எஃப் உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியா 3 தங்கம், 4 வெள்ளி, 1 வெண்கலம் என 8 பதக்கங்களுடன் முதலிடம் பிடித்து நிறைவு செய்துள்ளது.

தென்கொரியா, செர்பியா அணிகள் முறையே அடுத்த இரு இடங்களைப்பிடித்தன. முன்னதாக புதன்கிழமை முடிவில் இந்தியா, 2 தங்கம், 1 வெண்கலத்துடன் 2–ஆவது இடத்தில் இருந்தது.

இந்நிலையில், கடைசி நாளான வியாழக்கிழமை ஆடவருக்கான 10 மீ ஏர் ரைபிள் அணிகள் பிரிவு இறுதிச்சுற்றில் அர்ஜுன் பபுதா/சாஹூ துஷார் மனே/பார்த் மகிஜா அடங்கிய இந்திய அணி 17–15 என்ற புள்ளிகள் கணக்கில் தென் கொரியாவின் சியுங்கோ பாங்/சங்டோ கிம்/ஹாஜுன் பார்க் கூட்டணியை வீழ்த்தி தங்கம்வென்றது. இதில் அர்ஜுன், சாஹூவுக்கு இப்போட்டியில் இது 2–ஆவது தங்கப்பதக்கமாகும்.

அடுத்ததாக, மகளிருக்கான 10 மீ ஏர் ரைபிள் அணிகள் இறுதிச்சுற்றில் இந்தியாவின் இளவேனில் வாலரிவன் / மெஹுலி கோஷ்/ரமிதா கூட்டணி 10–16 என்ற கணக்கில் தென்கொரியாவின் ஜிஹியோன் கியும்/யுன்சியோ லீ / டேயோஹ் குவோனிடம் தங்கத்தை இழந்து வெள்ளி பெற்றனர்.

10 மீ ஏர் பிஸ்டல் அணிகளில், ஆடவர் பிரிவில் இந்தியாவின் ஷிவா நர்வால்/நவீன்/சாகர் தாங்கி ஆகியோர் 15–17 என்ற கணக்கில் இத்தாலியின் பாவ்லோ மோனா/அலெசியோ டொராச்சி/லுகா டெஸ்கோனியிடம் வெற்றியை இழந்து வெள்ளிப்பதக்கம் பெற்றனர். மகளிர் பிரிவிலும் ரிதம் சங்வான்/யுவிகா தோமர்/பாலக் ஆகியோர் கூட்டணி 2–10 என தென்கொரிய அணியிடம் தோற்று வெள்ளிபெற்றனர்.

இதுதவிர, ஆடவருக்கான டிராப் அணிகள் பிரிவில் இந்தியாவின் பிருத்விராஜ் தொண்டைமான்/விவான் கபூர்/ போவ்னீஷ் மெந்திராட்டா கூட்டணியும் வெள்ளிப்பதக்கம் பெற்றது.

---

**1. 'மிஷன் சக்தி' திட்டத்தைச் செயல்படுத்துகிற நடுவண் அமைச்சகம் எது?**

**அ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ☑**


ஆ. பாதுகாப்பு அமைச்சகம்

இ. வெளியுறவு அமைச்சகம்

ஈ. MSME அமைச்சகம்

✓ 'மிஷன் சக்தி' திட்டத்திற்கான விரிவான வழிகாட்டுதல்களை நடுவண் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ளது. மகளிரின் பாதுகாப்பிற்கான ஒருங்கிணைந்த ஒரு திட்டமாக பதினைந்தாவது நிதி ஆணையத்தின் காலமான 2021–2022 முதல் 2025–26இல் செயல்படுத்துவதற்காக இத்திட்டம் தொடங்கப்பட்டது. 'மிஷன் சக்தி' திட்டம் 'சம்பால்' மற்றும் 'சாமர்த்தியா' என இரண்டு துணைத் திட்டங்களைக் கொண்டுள்ளது.

**2. இந்தியாவில் குரங்கம்மை பாதிப்பைப் பதிவுசெய்துள்ள மாநிலம்/UT எது?**



அ. உத்தரப்பிரதேசம்

**ஆ. கேரளா ☑**

இ. சிக்கிம்

ஈ. பஞ்சாப்

✓ இந்தியாவில் குரங்கம்மை பாதிப்பு கேரள மாநிலத்தில் முதன்முறையாக பதிவாகியுள்ளது. புனேவில் உள்ள தேசிய தீநுண்மவியல் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட 35 வயது ஆணின் மாதிரி பரிசோதனையில் நோய் பாதிப்பு இருப்பது உறுதிசெய்யப்பட்டது. அந்நபர் 3 நாட்களுக்கு முன்னர் ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து கேரளா வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குரங்கம்மை என்பது வைரஸ்மூலம் பரவும் ஒரு நோயாகும். இது பெரியம்மை போன்றது.

**3. 2022 ஜூனில் அகில இந்திய மொத்த விலைக்குறியீட்டின் அடிப்படையில் பணவீக்க விகிதம் என்ன?**

அ. 11.18%

ஆ. 13.18%

**இ. 15.18% ☑**

ஈ. 17.18%

%

✓ 2022ஆம் ஆண்டு ஜூன் (2021 ஜூனுக்குப்பிறகு) மாதத்திற்கான அகில இந்திய மொத்த விலைக்குறியீட்டெண்ணின் அடிப்படையில் பணவீக்க விகிதம் 15.18% ஆகும். இது 2022 மேயில் உள்ள WPI சதவீதமான 15.88%–ஐவிடக் குறைவு. இந்த மாதத்தில் ஏற்பட்டுள்ள அதிக பணவீக்க விகிதம் கனிம எண்ணெய்கள், உணவுப்பொருட்கள், கச்சா பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, அடிப்படை உலோகங்கள், வேதிகள் மற்றும் வேதிப்பொருட்கள், உணவு ஆகியவற்றின் விலை உயர்வுகாரணமாக உள்ளது.

**4. மாநில மற்றும் ஒன்றிய வரிகள் மற்றும் தீர்வைகள் தள்ளுபடி (RoSCTL) திட்டத்துடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?**

அ. வெளியுறவு அமைச்சகம்

ஆ. MSME அமைச்சகம்

**இ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் ☑**

ஈ. நிதி அமைச்சகம்

✓ வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகமானது மாநில மற்றும் ஒன்றிய வரிகள் மற்றும் தீர்வைகள் (RoSCTL) தள்ளுபடிக்கான திட்டத்தைத் தொடர்வதற்கு, ஜவுளி அமைச்சகம் அறிவித்த அதே விகிதங்களுடன், ஆடைகள் மற்றும் ஒப்பனைப் பொருட்களின் ஏற்றுமதிக்கு 2024 மார்ச்.31 வரை அங்கீகாரம் அளித்துள்ளது. ஏற்றுமதியை அதிகரிப்பது மற்றும் ஜவுளித் தொழிலில் வேலைவாய்ப்பை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**5. டைம் இதழின், '2022–இன் உலகின் 50 சிறந்த இடங்கள்' பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

ஆ. கர்நாடகா

**இ. கேரளா ☑**

ஈ. இராஜஸ்தான்

✓ 'கடவுளின் சொந்த நாடு' என்றழைக்கப்படும் கேரளா, டைம் இதழின், "2022ஆம் ஆண்டின் உலகின் 50 சிறந்த இடங்கள்" பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. டைம், கேரளாவை இந்தியாவின் மிகவழகான மாநிலங்களுள் ஒன்று என விவரித்துள்ளது. இந்தியாவின் முதல் UNESCO உலகப் பாரம்பரிய நகரமான ஆமதாபாத், 2022ஆம் ஆண்டின் உலகின் 50 சிறந்த இடங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

**6. இந்தியாவின் மிகப்பெரிய மிதவை சூரிய மின்னுற்பத்தி ஆலை செயல்படுத்தப்பட்ட இடம் எது?**



அ. தமிழ்நாடு

**ஆ. தெலுங்கானா ☑**

இ. இராஜஸ்தான்

ஈ. மேகாலயா

✓ இந்தியாவின் மிகப்பெரிய மிதவை சூரிய மின்னுற்பத்தி ஆலை தெலுங்கானா மாநிலத்தில் உள்ள ராமகுண்டத்தில் முழுமையாக செயல்படத்தொடங்கியுள்ளது. தெலுங்கானா மாநிலம் இராமகுண்டத்தில் உள்ள 100 MW ராமகுண்டம் மிதவை சூரிய மின்னுற்பத்தி ஆலையின் இறுதிக்கட்டத்தை NTPC வணிக ரீதியாக இயக்குவதாக அறிவித்தது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதன்மூலம், தென் பிராந்தியத்தில் மிதவை சூரிய மின்னுற்பத்தி ஆலைகளின் மொத்த உற்பத்தி 217 MWஆக உயர்ந்தது. முன்னதாக, காயங்குளம் (கேரளா) மற்றும் சிம்மாத்திரி (ஆந்திரப்பிரதேசம்) ஆகிய இடங்களில் மிதவை சூரிய மின்னுற்பத்தி ஆலைகள் செயல்படுவதை NTPC அறிவித்தது.

**7. 2022 நிலவரப்படி, இந்தியாவின் அரசுத் தலைமை வழக்கறிஞர் யார்?**



**அ. K K வேணுகோபால் ☑**

ஆ. முகுல் ரோகத்கி

இ. துஷார் மேத்தா

ஈ. கபில் சிபல்

✓ நடுவண் சட்டத்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பின்படி, இந்திய அரசுத்தலைமை வழக்கறிஞர் K K வேணு கோபாலின் பதவிக்காலத்தை மூன்று மாதங்களுக்கு நீட்டித்து நடுவணரசு உத்தரவிட்டுள்ளது. 91 வயதான வேணு கோபால், இந்திய அரசுத்தலைமை வழக்கறிஞராகப் பணியாற்றும் 15ஆவது நபராக, 2017 ஜூலை.1ஆம் தேதியன்று நியமிக்கப்பட்டார். 2014 ஜூன் முதல் 2017 ஜூன் வரை இந்திய அரசுத்தலைமை வழக்கறிஞராக முகுல் ரோகத்கி இருந்தார்.

**8. மெர்சரின் 2022ஆம் ஆண்டுக்கான, நகரங்களில் வாழ்க்கைச்செலவினம் குறித்த தரவரிசையின்படி, அயல்நாட்டு ஊழியர்களுக்கு இந்தியாவில் மிகவும் செலவுமிகு நகரம் எது?**

அ. புது தில்லி

**ஆ. மும்பை ☑**

இ. பெங்களூரு

ஈ. சென்னை

✓ மெர்சரின் 2022ஆம் ஆண்டுக்கான, நகரங்களில் வாழ்க்கைச்செலவினம் குறித்த தரவரிசையின்படி, அயல்நாட்டு ஊழியர்களுக்கு இந்தியாவில் மிகவும் செலவுமிகுந்த நகரமாக மும்பை உலகளவில் 127ஆவது இடத்தில் உள்ளது. அதைத்தொடர்ந்து புது தில்லி 155ஆவது இடத்தில் உள்ளது. புனே மற்றும் கொல்கத்தா ஆகியவை முறையே 201 மற்றும் 203 ஆகிய இடங்களில் உள்ளன.

**9. பாஷ் இந்தியாவின் முதல் ஸ்மார்ட் வளாகத்தை, பிரதமர் மோடி, கீழ்க்காணும் எந்த நகரத்தில் திறந்து வைத்தார்?**

அ. சென்னை

**ஆ. பெங்களூரு ☑**




இ. நொய்டா

ஈ. ஹைதராபாத்

✓ ₹800 கோடி செலவில் கட்டப்பட்ட பெங்களூரு நகரத்தில், பாஷ் இந்தியாவின் முதல் ஸ்மார்ட் வளாகத்தை பிரதமர் மோடி திறந்து வைத்தார். இந்தியா மற்றும் உலகத்திற்கான எதிர்கால தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளை உருவாக்க இவ்வளாகம் பயன்படுத்தப்படும். பாஷ் இந்தியாவின் 'Spark.NXT' வளாகத்தின் திறப்பு விழா இந்திய விடுதலையின் 75ஆவது ஆண்டு விழாவுடன் ஒத்திணைந்து வருகிறது.

**10. 2022–இல் இந்திய ஒலிம்பிக் சங்கம் நடத்தும் தேசிய விளையாட்டுப்போட்டிகளை நடத்தும் மாநிலம் எது?**

அ. கோவா

ஆ. உத்தரகாண்ட்

**இ. குஜராத் ☑**

ஈ. சிக்கிம்

✓ இந்த ஆண்டு செப்–அக் மாதங்களில், குஜராத்தின் பல நகரங்களில் தேசிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும் என இந்திய ஒலிம்பிக் சங்கம் (IOA) அறிவித்துள்ளது. கடந்த 2015ஆம் ஆண்டு கேரள மாநிலத்தில் நடந்த தேசிய விளையாட்டுப்போட்டிகள் 2016ஆம் ஆண்டு நவம்பரில் கோவாவில் நடைபெறவிருந்தன. 2018 மற்றும் 2019ஆம் ஆண்டின் காலதாமதங்களுக்குப்பிறகு, கோவாவால் போதுமான உட்கட்டமைப்புகளை உருவாக்க முடியவில்லை. எனவே விளையாட்டுகள் கடந்த 2020ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டன. தேசிய விளையாட்டுகள் காரணமாக மேலும் அது ஒத்திவைக்கப்பட்டது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தேசிய தரவரிசை: சென்னை ஐஐடி நான்காவது ஆண்டாக முதலிடம்**

தேசிய அளவிலான ஒட்டுமொத்த உயர்கல்வி நிறுவனங்கள் தரவரிசைப் பட்டியலில் சென்னை ஐஐடி தொடர்ந்து நான்காவது ஆண்டாக 2022–ஆம் ஆண்டிலும் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.

பெங்களூரு இந்திய அறிவியல் கழகம் (ஐஐஎஸ்சி) இரண்டாமிடமும், மும்பை ஐஐடி மூன்றாமிடமும் பிடித்துள்ளன.

இந்திய உயர்கல்வி நிறுவனங்கள் சர்வதேச அளவிலான தரத்தைப் பெறுவதையும், சர்வதேச அளவிலான உயர் கல்வி நிறுவன தரவரிசைகளில் முன்னிலை வகிப்பதையும் ஊக்குவிக்கும் வகையில், தேசிய அளவிலான உயர் கல்வி நிறுவன தரவரிசை திட்டம் (NIRF) என்ற நடைமுறையை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் கடந்த 2015–ஆம் ஆண்டு செப்.29–ஆம் தேதி அறிமுகஞ்செய்து, கடந்த 2016–ஆம் ஆண்டு முதல் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டு வருகிறது.

கற்றல் – கற்பித்தல் மற்றும் அதற்கான வளங்கள், ஆராய்ச்சி மற்றும் தொழில் பயிற்சி மேம்பாடு நடைமுறைகள் உள்ளிட்ட பல்வேறு அளவீடுகளின் அடிப்படையில் மதிப்பெண் வழங்கப்பட்டு ஒட்டுமொத்த உயர்கல்வி நிறுவனங்கள் அளவிலான தரவரிசை, பல்கலைக்கழகங்கள் அளவிலான தரவரிசை, கல்லூரிகள் அளவிலான தரவரிசை, ஆராய்ச்சி நிறுவனங்கள் அளவிலான தரவரிசை, பொறியியல் கல்லூரிகள் அளவிலான தரவரிசை மற்றும் மேலாண்மை, மருந்தாளுநா் கல்வி நிறுவனம், மருத்துவக் கல்வி நிறுவனம், பல் மருத்துவக் கல்வி நிறுவனம், சட்டம் மற்றும் வேளாண் கல்வி நிறுவனங்கள் அளவில் என 11 பிரிவுகளின் கீழ் தரவரிசைப் பட்டியல்களை என்ஐஆர் ஒவ்வோர் ஆண்டும் வெளியிட்டு வருகிறது.

2022–ஆம் ஆண்டுக்கான இந்தத் தரவரிசைப் பட்டியல்களை மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளியிட்டார்.

இதில், ஒட்டுமொத்த உயர்கல்வி நிறுவனங்கள் அளவில் சென்னை ஐஐடி நான்காவது ஆண்டாக முதலிடம் பிடித்துள்ளது. பெங்களூரு ஐஐஎஸ்சி, மும்பை ஐஐடி, தில்லி ஐஐடி, கான்பூர் ஐஐடி, காரக்பூர் ஐஐடி, ரூர்கி ஐஐடி, கௌகாத்தி ஐஐடி ஆகியவை அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன. இதில் தில்லி எய்ம்ஸ் (அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம்) 9–ஆவது இடத்தையும், தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் 10–ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் அளவிலான தரவரிசைப் பட்டியல்களில் பெங்களூரு ஐஐஎஸ்சி முதலிடம் பிடித்துள்ளது.

பொறியியல் கல்வி நிறுவனங்கள் அளவிலான தரவரிசைப் பட்டியலில் சென்னை, மும்பை, கான்பூர், காரக்பூர், ரூர்கி, கௌகாத்தி, ஹைதராபாத் ஐஐடிக்கள் முன்னிலை வகிக்கின்றன. இந்தப் பட்டியலில் கடந்த முறை 9–ஆம் இடம் பிடித்த திருச்சி என்ஐடி, இம்முறை 8–ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. சூரத்கல் என்ஐடி தொடர்ந்து 10–ஆவது இடம்வகிக்கிறது.

**சென்னை மாநிலக்கல்லூரிக்கு மூன்றாமிடம்:** கல்லூரிகள் அளவிலான தரவரிசைப் பட்டியலைப் பொருத்தவரை தில்லி மிராண்டா ஹவுஸ் கல்லூரி முதலிடம் பிடித்துள்ளது. கடந்த முறை 9–ஆம் இடம்பிடித்திருந்த தில்லி ஹிந்து கல்லூரி, இம்முறை 2–ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. கடந்த முறை 7–ஆவது இடம் பிடித்திருந்த சென்னை மாநிலக்கல்லூரி இம்முறை 3–ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

கடந்த முறை 3–ஆவது இடத்திலிருந்து சென்னை லயோலா கல்லூரி, தற்போது 4–ஆவது இடத்துக்கு சென்றுள்ளது. அதுபோல, கடந்த முறை 2ஆம் இடம்பிடித்திருந்த தில்லி லேடி ஸ்ரீராம் மகளிர் கல்லூரி இம்முறை 5–ஆம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. மேலாண்மை கல்வி நிறுவனங்கள் பட்டியலில் அகமதாபாத் ஐஐஎம், மருத்துவக்கல்வி நிறுவனங்கள் பட்டியில் தில்லி எய்ம்ஸ், பல்மருத்துவக்கல்லூரி தரவரிசைப் பட்டியலில் சென்னை சவீதா மருத்துவ மற்றும் தொழில்நுட்ப அறிவியல் நிறுவனம் ஆகியவை முதலிடங்களைப் பிடித்துள்ளன.

**2. தேசிய மின்னாளுகை சேவை மதிப்பீடு: உள்துறை அமைச்சகத்திற்கு முதலிடம்**

தேசிய மின்னாளுகை சேவைக்கான மதிப்பீட்டில், மத்திய அமைச்சக இணையதளங்களில் உள்துறை விவகார அமைச்சக இணையதளம் சிறப்பாக அமைக்கப்பட்டு முதலிடத்தை பெற்றுள்ளதாக மத்திய நிர்வாகச் சீர்திருத்தங்கள், பொதுமக்கள் குறைதீர்ப்புத்துறை தெரிவித்துள்ளது. மேலும், உள்துறை அமைச்சகத்திற்கு கீழேயுள்ள எண்ம (டிஜிட்டல்) காவல் தளத்திற்கு இரண்டாவது இடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. SCO அமைப்பின் கலாசார, சுற்றுலா தலைநகரம் வாராணசி**

இந்தியாவின் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் பறைசாற்றும் வாராணசி நகரம், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) கலாசார மற்றும் சுற்றுலாத்தலைநகரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பின் பொதுச்செயலாளர் ஜங் மிங், பெய்ஜிங்கில் கூறியதாவது:

SCO அமைப்பின் 2022–23ஆம் ஆண்டுக்கான கலாசார, சுற்றுலாத்தலைநகராக வாராணசி அறிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் இந்த அமைப்பில் உள்ள நாடுகளின் நகரங்கள் சுழற்சி முறையில் சுற்றுலாத்தலைநகரமாக அறிவிக்கப்படும். அந்த வரிசையில் முதலாவது சுற்றுலாத் தலைநகரமாக இந்தியாவின் பழைமையான நகரங்களில் ஒன்றான வாராணசி அறிவிக்கப்பட்டுள்ளது.

SCO நாடுகளின் தலைவர்கள் மாநாடு, வரும் செப்டம்பரில் உஸ்பெகிஸ்தானில் நடைபெறவுள்ளது. அந்த மாநாட்டுக்குப் பிறகு SCO அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்கும். அடுத்த ஆண்டு நடைபெறும் மாநாட்டையும் இந்தியா தலைமையேற்று நடத்தும் என்றார் அவர்.

சீனாவின் பெய்ஜிங் நகரைத் தலைமையிடமாகக்கொண்டு செயல்படும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் சீனா, ரஷியா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய எட்டு நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. பாதுகாப்பு, பொருளாதார விவகாரங்களில் ஒத்துழைப்பை ஏற்படுத்த இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

---

**1. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'ஜெருசலேம் பிரகடனம்' என்பது இஸ்ரேலுக்கும் கீழ்க்காணும் எந்த நாட்டுக்கும் இடையிலான ஓர் உத்திசார் ஒப்பந்தமாகும்?**



அ. ஐக்கிய பேரரசு

**ஆ. அமெரிக்கா ☑**

இ. ஆஸ்திரேலியா

ஈ. ஐக்கிய அரபு அமீரகம்

✓ அமெரிக்க–இஸ்ரேலிய உத்திசார் கூட்டாண்மைக்கான கூட்டுப் பிரகடனத்தில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மற்றும் இஸ்ரேலிய பிரதமர் யாயர் லாபிட் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். இந்த அறிக்கை அமெரிக்க–இஸ்ரேல் உத்திசார் கூட்டாண்மை மற்றும் இஸ்ரேலின் பாதுகாப்பிற்கான அமெரிக்காவின் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மீதில் வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கூறப்படுகிறது. 'ஜெருசலேம் பிரகடனம்' என்பது இஸ்ரேல் – பாலஸ்தீன உறவுகளையும் குறிக்கிறது.

**2. 2022–23ஆம் ஆண்டிற்கான SCOஇன் முதல் கலாசார மற்றும் சுற்றுலா தலைநகரமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்திய நகரம் எது?**



அ. ஜெய்ப்பூர்

ஆ. கொச்சி

**இ. வாரணாசி ☑**

ஈ. கொல்கத்தா

✓ வாரணாசி நகரம் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) முதலாவது கலாசார மற்றும் சுற்றுலாத் தலைநகரமாக அறிவிக்கப்படும். எட்டு உறுப்பினர்களைக் கொண்ட அவ்வமைப்பின் புதிய சுழற்சி முயற்சியின்கீழ் 2022–23ஆம் ஆண்டிற்கான SCO–இன் சுற்றுலாத் தலைநகரமாக வாரணாசி ஆகும். இது உறுப்புநாடுகளிடையே மக்கள்–மக்கள் தகவல் தொடர்புகள் மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**3. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'ஜாக்ரிதி' என்பது கீழ்க்காணும் எதனுடன் தொடர்புடைய சின்னமாகும்?**




அ. வருமான வரி

ஆ. பருவநிலை மாற்றம்

**இ. நுகர்வோர் விழிப்புணர்வு ☑**

ஈ. கிரிப்டோ நாணயம்

✓ நுகர்வோர் விவகாரங்கள் துறையானது நுகர்வோரை மேம்படுத்துவதற்கும் அவர்களின் உரிமைகள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குமாக 'ஜாக்ரிதி' என்றவொரு சின்னத்தைத் தொடங்கியுள்ளது. இந்தச் சின்னம் அதன் அனைத்து ஊடக விளம்பரங்களிலும், 'ஜாகோ கிரஹக் ஜாகோ' என்ற முழக்க வரியுடன் ஒளிபரப்பப்படும். நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், ஹால்மார்க்கிங் மற்றும் தேசிய நுகர்வோர் ஹெல்ப்லைன் 1915 போன்ற நுகர்வோர் விவகாரங்கள் துறையின் பல்வேறு கருப்பொருள்கள் குறித்து நுகர்வோரிடையே விழிப்புணர்வை உருவாக்க இது பயன்படுத்தப்படும்.

**4. 2022 – தேசிய நிறுவனத் தரவரிசை கட்டமைப்பில் (NIRF) முதலிடத்தைப் பிடித்த நிறுவனம் எது?**

அ. ஐஐடி தில்லி

ஆ. ஐஐடி கான்பூர்

**இ. ஐஐடி மெட்ராஸ் ☑**

ஈ. ஐஐடி பாம்பே

IIT Madras

✓ மத்திய கல்வி அமைச்சகமானது நடப்பு 2022ஆம் ஆண்டிற்கான தேசிய நிறுவனத் தரவரிசை கட்டமைப்பை (NIRF) வெளியிட்டுள்ளது. மெட்ராஸில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனமானது (IIT) தொடர்ந்து நான்காமாண்டாகவும்,

பொறியியல் பிரிவில் தொடர்ந்து ஏழாமாண்டாகவும் தனது முதலிடத்தை தக்கவைத்துள்ளது. இந்திய தொழில்நுட்பக் கழகம், தில்லி இரண்டாமிடத்தையும், மும்பையில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனம் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது.

**5. 'e–FIR சேவை' மற்றும் ஒரு 'காவல்துறை செயலி'யை அறிமுகப்படுத்திய இந்திய மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

ஆ. கர்நாடகா

**இ. உத்தரகாண்ட் ☑**

ஈ. இராஜஸ்தான்

✓ உத்தரகாண்ட் மாநில முதலமைச்சர் புஷ்கர் சிங் தாமி, 'e–FIR' வசதி மற்றும் உத்தரகாண்ட் மாநிலத்திற்கெனத் தனி காவல்துறை செயலியையும் அறிமுகம் செய்துவைத்தார். 'e–FIR' வசதி தொடங்கப்பட்டதன்மூலம் மக்கள் திருட்டு தொடர்பான புகார்களை இணையவழியில் அளிக்கவியலும். பொதுமக்களுக்கு உத்தரகாண்ட் மாநிலக் காவல்துறை வழங்கும் அனைத்து இணையவழி சேவைகளும் உத்தரகாண்ட் மாநிலத்தின் 'காவல்துறை செயலி'யில் ஒருங்கே இணைக்கப்பட்டுள்ளன. இதில் கௌரா சக்தி, டிராஃபிக் ஐ, பப்ளிக் ஐ, மேரி யாத்ரா மற்றும் லக்ஷ்ய நாஷா முக்த் உத்தரகாண்ட் உள்ளிட்ட சேவைகள் அடங்கும்.

**6. 'பன்னாட்டு நாடாளுமன்ற முறை நாள்' கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

அ. ஜூன்.27

**ஆ. ஜூன்.30 ☑**

இ. ஜூலை.15

ஈ. ஜூலை.18




✓ நவீன சமூகங்களை வடிவமைப்பதில் நாடாளுமன்ற அரசாங்க அமைப்புகளின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் நோக்கோடு ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.30ஆம் தேதியன்று பன்னாட்டு நாடாளுமன்ற நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு, 'நாடாளுமன்றத்தின் பணிகளில் பொதுமக்கள் ஈடுபாடுகுறித்த உலகளாவிய நாடாளுமன்ற அறிக்கை' அண்மையில் வெளியிடப்பட்டதால், நாடாளுமன்றங்களுக்கிடையேயான ஒன்றியம் மற்றும் அதன் உறுப்பினர்கள் 'Public Engagement – பொது ஈடுபாடு' என்ற கருப்பொருளின்கீழ் இந்நாளை கடைபிடித்தனர்.

**7. 'உலக சிறுகோள்கள் நாள்' கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

**அ. ஜூன்.30 ☑**

ஆ. ஜூலை.05

இ. ஜூலை.18

ஈ. ஆகஸ்ட்.25




✓ சிறுகோள்களின் அபாயகரமான விளைவைப்பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, உலக சிறுகோள்கள் நாள் உலகளவில் ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.30 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது. 2016 டிசம்பரில், ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஜூன்.30ஆம் தேதியை பன்னாட்டு சிறுகோள்கள் நாளாக அறிவித்து தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியது. கடந்த 1908ஆம் ஆண்டு இதே நாளில் சைபீரியாமீது நிகழ்ந்த துங்குஸ்கா நிகழ்வின் ஆண்டு நிறைவை ரஷ்ய கூட்டமைப்பு ஒவ்வோர் ஆண்டும் இந்நாளின்போது அனுசரிக்கிறது.

**8. 2023 – 'QS மாணவர்களுக்கான சிறந்த நகரங்களின் தரவரிசையில்' முதலிடம் பிடித்த நகரம் எது?**

அ. துபாய் ஆ. சிங்கப்பூர்

**இ. லண்டன் ☑** ஈ. நியூயார்க்



- ✓ 2023 – QS மாணவர்களுக்கான சிறந்த நகரங்களின் தரவரிசையில், அயல்நாட்டில் படிக்க விழையும் மாணவர்க –ளுக்கான சிறந்த நகரமாக லண்டன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சியோல் மற்றும் முனிச் இரண்டாவது இடத்தில் உள்ளன. இந்த அறிக்கை உலகின் 140 நகரங்களை தாங்குமை (affordability), மாணவர்களுக்கான வசதிகள் மற்றும் பல்கலைக்கழகத்தின் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் தரவரிசைப்படுத்துகிறது.

- ✓ இந்தியாவைப் பொறுத்தவரை மாணவர்களுக்கான மிகச்சிறந்த நகரமாக மும்பை – 103ஆம் இடத்தில் உள்ளது. அதைத் தொடர்ந்து பெங்களூரு – 114ஆம் இடத்தில் உள்ளது.

### 9. இங்கிலாந்து நாடாளுமன்றத்தால் 'ஆயுர்வேத இரத்னா' விருது வழங்கப்பெற்ற இந்தியர் யார்?



**அ. தனுஜா நேசரி ☑**

ஆ. அபிமன்யு குமார்

இ. இராஜேஷ் பூஷன்

ஈ. சஞ்சை ஜைன்

- ✓ அகில இந்திய ஆயுர்வேத நிறுவனத்தின் (AIIA) இயக்குநர் தனுஜா நேசரிக்கு இங்கிலாந்து நாடாளுமன்றத்தால் 'ஆயுர்வேத இரத்னா' விருது வழங்கப்பட்டது. இந்தியாவிலும் அயல்நாட்டிலும் ஆயுர்வேதத்தின் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் அவராற்றிய பங்களிப்பை அங்கீகரித்து, இந்திய பாரம்பரிய அறிவியலுக்கான இங்கிலாந்தின் அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு (ITSappg) இந்த விருதை வழங்கியுள்ளது.

### 10. 'பெஞ்ச்மார்க்கிங் இந்தியாஸ் பேமெண்ட் சிஸ்டம்ஸ்' என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ. உலக வங்கி

**ஆ. இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ☑**

இ. இந்திய தேசிய கொடுப்பனவு கழகம்

ஈ. பன்னாட்டு செலவாணி நிதியம்

- ✓ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) 'பெஞ்ச்மார்க்கிங் இந்தியாஸ் பேமெண்ட் சிஸ்டம்ஸ்' என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இது பிற பெரிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவில் உள்ள கொடுப்பனவு சூழலின் நிலைகுறித்த தகவலை அளிக்கிறது. இவ்வறிக்கையின்படி, இந்தியா கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளது. மேலும், பெரிய மதிப்புள்ள டிஜிட்டல் கொடுப்பனவு (payment) முறைமைகளில் தலைமை நிலைக்கு நகர்ந்துள்ளது. ஆனால் ATM–கள் மற்றும் பணவட்டை வழியிலான கொடுப்பனவுகள் தொடர்பான சில அளவுருக்களில் இந்தியா இன்னும் பலவீனமான நிலையிலேயே உள்ளது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. குடியரசுத்தலைவர் தேர்தல்; தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 100% வாக்குப்பதிவு**

புதிய இந்தியக்குடியரசுத்தலைவரை தேர்வுசெய்வதற்கான தேர்தல் இன்று நாடு முழுவதும் உள்ள சட்டப்பேரவை செயலகங்களில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை 31 இடங்களில் நடைபெற்றது.

நீதிமன்ற உத்தரவை மீறியதால் மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951, 8ஆவது பிரிவின்படி தகுதிநீக்கஞ்செய்யப்பட்ட இரண்டு சட்டபேரவை உறுப்பினர்கள், மாநிலங்களவையில் உள்ள 5 காலியிடம், மாநில சட்டப்பேரவையில் உள்ள 6 காலியிங்கள் தவிர்த்து மொத்தம் 4796 பேர் (771 நா. உ–க்கள் & 4025 ச. ம. உ–க்கள்) வாக்களித்தனர்.

இந்தத் தேர்தலில் பிரதமர், மத்திய அமைச்சர்கள், மாநில முதலமைச்சர்கள் மற்றும் மக்களவை, மாநிலங்களவை, சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களது வாக்கினை பதிவு செய்தனர். இதில் தமிழ்நாடு, புதுச்சேரி, குஜராத், கேரளா கர்நாடகா உள்ளிட்ட 11 மாநிலங்களில் 100% வாக்கு பதிவாகியுள்ளது.

**2. பொலிவுறு நகரங்கள் திட்டத்திற்காக 5 ஆண்டுகளுக்கு ₹48,000 கோடி நிதியுதவியை நடுவணரசு அளிக்கிறது**

கடந்த 2015ஆம் ஆண்டு ஜூன்.25ஆம் தேதி பொலிவுறு நகரங்கள் திட்டத்தை நடுவணரசு தொடங்கியது. 2016ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை 4 சுற்று போட்டியின் மூலம் 100 பொலிவுறு நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. பொலிவுறு நகரங்கள் திட்ட வழிகாட்டுதலின்படி, ஐந்து ஆண்டுகளுக்கு ₹48,000 கோடி நிதியுதவியை மத்திய அரசு வழங்கும். சராசரியாக வருடத்திற்கு ₹100 கோடி அளிக்கும்.

2022ஆம் ஆண்டு ஜூலை.8ஆம் தேதியின்படி, 100 நவீன நகரங்களுக்காக ₹30,751.41 கோடியை நடுவணரசு விடுவித்துள்ளது. இதில், 90% அளவாக ₹27,610.34 கோடி பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டிற்கு ₹4,333.87 கோடி வழங்கப்பட்டதில் ₹3,932.06 கோடி பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்தகவலை மாநிலங்களவையில் மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை இணையமைச்சர் திரு கவுஷல் கிஷோர் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்தார்.

---

**3. இன்று தமிழ்நாடு திருநாள் விழா**

தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு திருநாள் சிறப்பு விழா ஜூலை.18 அன்று நடைபெறுகிறது. அன்றைய சென்னை மாகாணத்துக்கு தமிழ்நாடு என்று முன்னாள் முதலமைச்சர் 'பேரறிஞர்' கா. ந அண்ணாதுரை அவர்களால், கடந்த 1967–ஆம் ஆண்டு ஜூலை 18–ஆம் தேதி பெயர்சூட்டப்பட்டது. இதனைக் கொண்டாடும் வகையில் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளதாக தமிழ்நாடு அரசு அறிவித்திருந்தது.

அதன்படி, தமிழ்நாடு நாளையொட்டி பல்வேறு சான்றோர்களுக்கு 'இலக்கிய மாமணி', 'தமிழ்த்தென்றல்', 'அம்மா இலக்கிய விருது', 'காரைக்கால் அம்மையார்' விருது போன்றவை விழாவில் அளிக்கப்படவுள்ளன.

---

**4. வர்த்தகம், முதலீடுகளை ஈர்க்கும் இந்திய – ஆப்பிரிக்க வளர்ச்சி கூட்டுறவு மாநாடு: நாளை தொடக்கம்**

இந்தியா–ஆப்பிரிக்க நாடுகளிடையே வர்த்தகம் மற்றும் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் இரு நாடுகளிடையே ஆன இரண்டு நாள் வளர்ச்சி கூட்டுறவு மாநாடு தில்லியில் செவ்வாய்க்கிழமை (ஜூலை.19) தொடங்கவுள்ளது. இந்திய–ஆப்பிரிக்க வளர்ச்சி கூட்டுறவுக்கான இந்த CII (இந்திய தொழிலக கூட்டமைப்பு) EXIM வங்கி மாநாட்டில் வெளியுறவு அமைச்சர் எஸ் ஜெய்சங்கர், மத்திய வணிக, தொழில், நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் பொது விநியோகம், ஜவுளித்துறை அமைச்சர் பியூஷ் கோயல் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

---

**5. கடற்படையிலிருந்து விடைபெற்றது INS சிந்துத்வஜ்**

கடற்படையில் கடந்த 35 ஆண்டுகளாக சேவையாற்றிய INS சிந்துத்வஜ் நீர்மூழ்கிக்கப்பல் விடைபெற்றது. இதை ஒட்டிய நிகழ்ச்சி விசாகப்பட்டினத்தில் நடைபெற்றது. கடற்படையில் சிந்துத்வஜ் நீர்மூழ்கிக்கப்பல் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. ரஷியாவில் கட்டமைக்கப்பட்ட சிந்துகோஷ் இரக நீர்மூழ்கிக்கப்பலின் வரிசையில், INS சிந்துத்வஜ் நீர்மூழ்கிக்கப்பல், 'தற்சார்பு இந்தியா' திட்ட முயற்சிக்கு உதாரணமாக விளங்குகிறது.

கடலின் ஆழத்தை அளவிட உதவும் சோனார் கருவி, முற்றிலும் உள்நாட்டில் கட்டமைக்கப்பட்ட செயற்கைக்கோள் தொலைத்தொடர்பு அமைப்பு, திசைகாட்டும் கருவி உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இக்கப்பலில் இடம்பெற்றிருந்தன. புத்தாக்க முயற்சிக்காக CNS ரோலிங் கோப்பையை வென்ற முதல் நீர்மூழ்கிக் கப்பல் INS சிந்துத்வஜ் ஆகும்.

---

**6. சாம்பியன் பி.வி. சிந்து**

சிங்கப்பூர் ஓபன் பாட்மின்டன் சூப்பர் 500 போட்டி மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி.வி. சிந்து முதன் முதலாக சாம்பியன் பட்டம் வென்றார். இறுதிச்சுற்றில் சீனாவின் வாங் ஸியியை 21–9, 11–21, 21–15 என்ற கேம் கணக்கில் வீழ்த்தினார்.

முதன்முதலாக சிங்கப்பூர் ஓபனில் பட்டம்வென்ற சிந்துவுக்கு நிகழாண்டில் சையத் மோடி, சுவிஸ் ஓபன் பட்டத்துடன் இது மூன்றாவது பட்டமாகும். மேலும் சூப்பர் 500 போட்டியில் நிகழாண்டு முதல் பட்டம் இதுவாகும். பர்மிங்ஹாம் காமன்வெல்த் போட்டியில் ஆடவுள்ள சிந்துவுக்கு இந்த வெற்றி ஊக்கமாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

**1. 'பன்னாட்டு நீதிக்கான உலக நாள்' கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

அ. ஜூலை.15

**ஆ. ஜூலை.17 ☑**

இ. ஜூலை.19

ஈ. ஜூலை.21

✓ பன்னாட்டளவிலான நீதியை உணர்த்தவும், பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை மேம்படுத்தவுமாக ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.17ஆம் தேதி, 'பன்னாட்டு நீதிக்கான உலக நாள்' அனுசரிக்கப்படுகிறது. இது பன்னாட்டு குற்றவியல் நீதி நாள் என்றும் அழைக்கப்படுகிறது. ரோம் சட்டத்தின் ஒப்புதல் மற்றும் 1998–இல் புதிய பன்னாட்டு குற்றவியல் நீதி அமைப்பு உருவானதையும் இந்த நாள் கொண்டாடுகிறது. 139–க்கும் மேற்பட்ட நாடுகள் பன்னாட்டு குற்றவியல் நீதிமன்ற ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன.

**2. '2022 – சிங்கப்பூர் ஓபன்' சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்ற இந்திய விளையாட்டு வீரர் / வீராங்கனை யார்?**

அ. ஸ்ரீகாந்த் கிடாம்பி

**ஆ. P V சிந்து ☑**

இ. சாய்நா நேவால்

ஈ. லக்ஷ்யா சென்



✓ 2022 – சிங்கப்பூர் ஓபன் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் இந்திய வீராங்கனை P V சிந்து, சீனத்தின் வாங் ஜி யியை தோற்கடித்தார். இருமுறை ஒலிம்பிக் பதக்கம் வென்றவரான P V சிந்து 2022ஆம் ஆண்டில் வெல்லும் முதல் சூப்பர் ஐந்நூறு பட்டமாகும் இதுவாகும். 2022–சிங்கப்பூர் ஓபன் பட்டமானது சிந்துவின் மூன்றாவது பட்டமாகும். சையத் மோதி இன்டர்நேஷனல் மற்றும் சுவிஸ் ஓபன் BWF சூப்பர் 300 பட்டங்களைத் தொடர்ந்து அவர் வெல்லும் மூன்றாவது பட்டமாகும் இது.

**3. 'பாரத் ரங் மகோத்சவம் – 2022'ஐ ஏற்பாடு செய்கிற நிறுவனம் எது?**

**அ. தேசிய நாடகப்பள்ளி ☑**

ஆ. லலித் கலா அகாதெமி

இ. NITI ஆயோக்

ஈ. சாகித்திய அகாதெமி

✓ புது தில்லியில் உள்ள தேசிய நாடகப்பள்ளியானது, 'விடுதலை அமுதப்பெருவிழா – 22ஆவது பாரத் ரங் மகோத்சவம், 2022' திருவிழாவை ஏற்பாடு செய்தது. தேசிய நாடகப்பள்ளி என்பது கலாச்சார அமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு தன்னாட்சிமிக்க அமைப்பாகும். 'விடுதலை அமுதப்பெருவிழா – 22ஆவது பாரத் ரங் மகோத்சவம், 2022'இன்கீழ், நமது விடுதலைப்போராட்ட வீரர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதை இந்தத் திருவிழா தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. புது தில்லியில் தொடங்கப்படும் இந்த விழா புவனேசுவரம், வாரணாசி, அமிர்தசரசு, பெங்களூரு மற்றும் மும்பை ஆகிய ஐந்து நகரங்களில் நடத்தப்படும்.

**4. அண்மையில் இந்திய கடற்படையிலிருந்து பணி நீக்கஞ்செய்யப்பட்ட நீர்மூழ்கிக்கப்பலின் பெயர் என்ன?**

**அ. INS சிந்துத்வாஜ் ☑** ஆ. INS இராஜ்புத்

இ. INS இரஞ்சித் ஈ. INS நிஷாங்க்

✓ 'INS சிந்துத்வாஜ்' என்னும் நீர்மூழ்கிக்கப்பல் 35 ஆண்டுகள் சேவையாற்றியபிறகு இந்திய கடற்படையிலிருந்து அண்மையில் பணிநீக்கஞ்செய்யப்பட்டது. இந்த நீர்மூழ்கிக்கப்பலின் முகட்டுப்புறம் ஒரு சாம்பல் நிற சுறாமீனைச் சித்தரிக்கும் வகையில் வடிவமைப்பு உடையது. மேலும், 'சிந்துத்வாஜ்' என்றால் கடலில் கொடியை ஏந்துபவர் என்று

பொருளாகும். இந்நீர்மூழ்கிக்கப்பல் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட சோனார் USHUS, உள்நாட்டில் உருவாக்கப்பட்ட செயற்கைக்கோள் தகவல் தொடர்பு அமைப்புகளான ருக்மணி மற்றும் இன்டர்ஷியல் நேவிகேஷன் சிஸ்டம் மற்றும் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட டார்பிடோ தீ கட்டுப்பாட்டு அமைப்பு ஆகியவற்றிற்காக பிரபலமாக அறியப்பட்டது.

**5. சமீபத்தில், தேசிய பங்குச்சந்தையின் (NSE) நிர்வாக இயக்குநர் மற்றும் CEO–ஆக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. உர்ஜித் படேல்

**ஆ. ஆஷிஷ்குமார் சௌகான் ☑**

இ. K V காமத்

ஈ. அருந்ததி பட்டாச்சார்யா



✓ தேசிய பங்குச்சந்தையின் (NSE) அடுத்த நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக ஆஷிஷ்குமார் சௌகானை நியமிப்பதற்கு இந்தியப் பங்குச்சந்தை வாரியம் (SEBI) ஒப்புதல் அளித்துள்ளது. சௌகான் தற்போது மும்பை பங்குச் சந்தையின் (BSE) நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக உள்ளார். அதில் அவரது பதவிக்காலம் 2022 நவம்பரில் முடிவடைகிறது. ஆஷிஷ்குமார் சௌகான் NSEஇன் நிறுவனர்களுள் ஒருவர் ஆவார். அவர் 1992 முதல் 2000 வரை NSE–இல் பணியாற்றியுள்ளார்.

**6. டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரு ஓவரில் அதிக ரன்கள் குவித்து உலக சாதனை படைத்த இந்திய கிரிக்கெட் வீரர் யார்?**

அ. விராட் கோலி

**ஆ. ஜஸ்பிரித் பும்ரா ☑**

இ. ரோகித் சர்மா

ஈ. இரவீந்திர ஜடேஜா



✓ டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரு ஓவரில் அதிக இரன்களை எடுத்த வீரர் என்ற உலக சாதனையை ஜஸ்பிரித் பும்ரா படைத்துள்ளார். அவர் ஒரு ஓவரில் 2 சிக்ஸர்கள் மற்றும் 4 பவுண்டரிகளுடன் 35 ரன்கள் எடுத்தார். இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5ஆம் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஸ்டூவர்ட் பிராட் வீசிய ஓவரில் அவர் இந்தச் சாதனையை நிகழ்த்தினார்.

**7. பன்னாட்டு கடலோர தூய்மை நாள் கொண்டாடப்படுகிற மாதம் எது?**

அ. ஜூலை

ஆ. ஆகஸ்ட்

**இ. செப்டம்பர் ☑**

ஈ. டிசம்பர்



✓ 'விடுதலை அமுதப்பெருவிழாவின்' நினைவாக நாட்டின் 75 கடற்கரைகளை தூய்மைப்படுத்தும் வகையில் இந்தியா தனது கடற்கரைத் தூய்மையாக்கல் இயக்கத்தை சமீபத்தில் தொடங்கியது. 2022ஆம் ஆண்டு ஜூலை.3ஆம் தேதி முதல் செப்.17ஆம் தேதி வரை 75 நாட்களுக்கு நாடு முழுவதும் உள்ள கடலோரப்பகுதிகள் தூய்மையாக்கப்படும். இது பன்னாட்டு கடலோர தூய்மைப்படுத்தும் நாளாகவும் கொண்டாடப்படுகிறது. கடற்கரையோரங்களில் இருந்து 1,500 டன் அளவுக்கு குப்பைகளை அகற்றுவதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும்.

**8. 10 கிகாவாட் (GW) உற்பத்தித்திறன்கொண்ட அல்ட்ரா மெகா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திப்பூங்காவை உருவாக்குவதற்காக, பின்வரும் எந்த மாநிலத்துடனான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் NTPC கையெழுத்திட்டது?**

அ. தமிழ்நாடு **ஆ. இராஜஸ்தான் ☑**

இ. ஒடிஸா ஈ. குஜராத்

- ✓ இராஜஸ்தானில் 10 கிகாவாட் (GW) உற்பத்தித்திறன்கொண்ட அல்ட்ரா மெகா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திப் பூங்காவை உருவாக்க இராஜஸ்தான் மாநில அரசுடனான NTPC புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. 2032ஆம் ஆண்டுக்குள் 60 கிகாவாட் (GW) புதுப்பிக்கத்தக்க ஆற்றல்திறன் என்ற இலக்கை எட்டுவதை இலக்காகக் கொண்டுள்ளது. NTPC REL ஆனது குஜராத்தின் ரான் ஆப் கட்ச்சில் 4.75 GW திறன்கொண்ட ஒரு UMREPP (Ultra Mega Renewable Energy Power Parks)–ஐ உருவாக்கி வருகிறது.

**9. அளவு மற்றும் மதிப்பின் அடிப்படையில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் இந்தியாவின் முதன்மையான கடல்சார் உணவுப்பொருள் எது?**

**அ. உறைய வைக்கப்பட்ட இறால் மீன்கள் ☑**

ஆ. உறைய வைக்கப்பட்ட கணவாய் மீன்கள்

இ. உறைய வைக்கப்பட்ட மீன்கள்

ஈ. உறைய வைக்கப்பட்ட தோட்டுக்கணவாய் மீன்கள்



- ✓ 2021–22ஆம் ஆண்டில், கடுமையான ஏற்ற இறக்கங்களைக்கண்டபோதிலும், ₹57,586.48 கோடி ($7.76 பில்லியன்) மதிப்புள்ள 13,69,264 MT கடல் உணவுகளை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது.
- ✓ 2021–22ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியானது இந்திய ரூபாய் மதிப்பில் 31.71% அதிகரித்துள்ளது. அளவு மற்றும் மதிப்பின் அடிப்படையில் இந்தியாவின் முதன்மை ஏற்றுமதிப்பொருளாக உறைய வைக்கப்பட்ட இறால் மீன்கள் உள்ளன. உறைய வைக்கப்பட்ட இறால் மீன்களுக்கான மிகப்பெரிய சந்தையாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA) உள்ளது. அதைத் தொடர்ந்து சீனாவும் ஐரோப்பிய ஒன்றியமும் உள்ளது.

**10. 'ஆஷாதி பிஜ்' என்னும் திருவிழா கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் கொண்டாடப்படுகிறது?**

அ. பஞ்சாப்

**ஆ. குஜராத் ☑**

இ. மத்திய பிரதேசம்

ஈ. ஒடிஸா



- ✓ 'ஆஷாதி பிஜ்' என்பது ஹிந்து சமய நாட்காட்டியின்படி, ஆடி மாதத்தில் வரும் இரண்டாவது நாளாகும். இது கட்ச் பகுதியில், பருவமழையின் தொடக்கத்துடன் தொடர்புடையதாகக் கருதப்பட்டு வெகுவிமரிசையாக அந்தப் பகுதி மக்களால் கொண்டாடப்படுகிறது. குஜராத் மாநிலத்தில் வாழும் கச்சி இன மக்கள் இந்நாளில் தங்கள் புத்தாண்டைக் கொண்டாடுகிறார்கள்.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தேசிய துப்பாக்கி சுடும் போட்டி: தமிழ்நாட்டின் NCC படை இரண்டாமிடம்**

தேசிய மாணவர் படை இயக்குநரகங்களுக்கு இடையே நடைபெற்ற தேசிய அளவிலான துப்பாக்கிசுடும் போட்டியில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி மற்றும் அந்தமானை உள்ளடக்கிய இயக்குநரகம் தேசிய அளவில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. இப்போட்டியில் வெற்றிபெற்றவர்கள் வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச நாடுகளுக்கு இடையேயான போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.

---

**2. தேசிய தரவரிசைப்பட்டியல்: சென்னை மருத்துவக் கல்லூரிக்கு 12–ஆவது இடம்**

தரமான கல்வியை அளிப்பதில் தேசிய அளவில் சிறந்து விளங்கும் கல்லூரிகளுக்கான தரவரிசைப்பட்டியல் சென்னை மருத்துவக்கல்லூரி 12–ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. மத்திய கல்வி அமைச்சகம், ஆண்டுதோறும் சிறப்பாக செயல்படும் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களை பல பிரிவுகளின்கீழ் தரவரிசைப்படுத்தி பட்டியல் வெளியிடுகிறது. அதன்படி நிகழாண்டு தரவரிசைப்பட்டியலில் சென்னை மருத்துவக் கல்லூரி 12–ஆவது இடத்தைப்பிடித்துள்ளது. மேலும், மாநில அரசால் நடத்தப்படும் மருத்துவ கல்லூரிகளில் முதலிடம் பெற்றுள்ளது.

தென்னிந்தியாவிலேயே முதன்முறையாக மருத்துவப் பயிற்சிக்காக சென்னை மருத்துவப்பள்ளியானது கடந்த 1835–ஆம் ஆண்டு பிப்ரவரி 13–ஆம் தேதி தொடங்கப்பட்டது. அதன்பின்னர் படிப்படியாக அங்கு பட்டப்படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதனிடையே, சென்னைப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது. அதன் நீட்சியாக சென்னை மருத்துவப் பள்ளியை கல்லூரியாக மாற்ற விண்ணப்பிக்கப்பட்டது. அது ஏற்கப்பட்டு கடந்த 1850–ஆம் ஆண்டு அக்.1–ஆம் தேதி சென்னை மருத்துவப்பள்ளியானது சென்னை மருத்துவக் கல்லூரியாக மாற்றப்பட்டது.

---

**3. தமிழ்நாடு திருநாள் விழா: எழுத்தாளர்கள்–தமிழறிஞர்களுக்கு விருதுகள்**

தமிழ்நாடு திருநாளையொட்டி, சென்னையில் நடந்த விழாவில், எழுத்தாளர்கள், தமிழறிஞர்களுக்கு விருதுகளை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வழங்கினார்.

'இலக்கிய மாமணி' விருது எழுத்தாளர்கள் கோணங்கி, இரா. கலியபெருமாள், மறைந்த கு. சின்னப்ப பாரதி ஆகியோருக்கு வழங்கப்பட்டது. இந்த விருது ₹5 இலட்சத்துக்கான காசோலை, தங்கப்பதக்கம், தகுதியுரை ஆகியவை அடங்கியதாகும்.

2021–ஆம் ஆண்டுக்கான 'தமிழ்த்தென்றல் திரு.வி.க விருது' கயல் தினகரன், 'கபிலர் விருது' பாவலர் கருமலைத் தமிழாழன் என்கிற கி. நரேந்திரன், 'உ.வே.சா. விருது' மருத்துவர் இரா. கலைக்கோவன், 'அம்மா இலக்கிய விருது' முனைவர் மு. சற்குணவதி, 'காரைக்கால் அம்மையார் விருது' முனைவர் இரா. திலகவதி சண்முகசுந்தரம் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. இந்த விருது ₹2 இலட்சத்துக்கான காசோலை தங்கப்பதக்கம், தகுதியுரை ஆகியவை அடங்கியது.

---

**4. நீட் தேர்வர்கள் மனநல ஆலோசனைக்கு 104 எண்ணை அழைக்கலாம்: அமைச்சர் மா சுப்பிரமணியன்**

தமிழகத்தில் நீட் தேர்வு எழுதிய தேர்வர்களுக்கு மனவழுத்தம் மற்றும் குழப்பங்கள் இருந்தால், '104' என்ற இலவச எண்ணை தொடர்புகொள்ளலாம் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் தெரிவித்தார்.

---

**1. சில பொதுத்துறை வங்கிகள் அண்மையில் 'AA' சூழலமைப்புடன் இணைக்கப்பட்டன. 'AA'இன் விரிவாக்கம் என்ன?**

அ. Amount Aggregator

**ஆ. Account Aggregator ☑**

இ. Affiliate Aggregator

ஈ. Account Administrator

✓ பொதுத்துறை வங்கியான பஞ்சாப் தேசிய வங்கி (PNB) நிதிநிலைத் தகவல் பயனர் (FIU) மற்றும் நிதிநிலைத் தகவல் வழங்குநர் (FIP) என கணக்கு திரட்டி சூழலமைப்பில் செயல்பாட்டில் உள்ளது. யூனியன் பாங்க் ஆப் இந்தியா, கனரா வங்கி மற்றும் இந்தியன் வங்கி ஆகியவை கணக்கு திரட்டி அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன. SBI, BOB மற்றும் UCO வங்கி உள்ளிட்ட பிற வங்கிகள் சோதனை கட்டத்தில் உள்ளன; மேலும் சில வளர்ச்சிக்கட்டத்தில் உள்ளன.

**2. 2022 குடியரசுத்தலைவர் தேர்தலானது எத்தனையாவது இந்தியக்குடியரசுத்தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்படுகிறது?**

அ. 12ஆவது

ஆ. 14ஆவது

**இ. 15ஆவது ☑**

ஈ. 17ஆவது

✓ இந்தியாவின் 15ஆவது குடியரசுத்தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக நடப்பு 2022ஆம் ஆண்டு குடியரசுத்தலைவர் தேர்தல் இந்தியாவில் நடைபெறுகிறது. இத்தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் திரௌபதி முர்முவும், எதிர்க்கட்சிகளின் வேட்பாளர் யஷ்வந்த் சின்ஹாவும் போட்டியிடுகின்றனர். நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் அனைத்து மாநிலங்களின் சட்டமன்றங்கள் மற்றும் தில்லி மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் ஆகியவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய வாக்காளர் குழுமத்தால் குடியரசுத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

**3. உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கு நிதியுதவிபுரியும் தேசிய வங்கியின் (NaBFID) நிர்வாக இயக்குநராக (MD) பரிந்துரைக்கப்பட்டுள்ளவர் யார்?**

**அ. G இராஜ்கிரண் இராய் ☑**

ஆ. K V காமத்

இ. உர்ஜித் படேல்

ஈ. V K சிங்



✓ நிதியியல் சேவைகள் நிறுவனப்பணியகமானது (FSIB) G ராஜ்கிரண் ராயை உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கு நிதியுதவி அளிக்கும் தேசிய வங்கியின் (NaBFID) நிர்வாக இயக்குநராகப் பரிந்துரைத்துள்ளது. அண்மையில் நிறுவப்பட்ட பிறகு, FSIB வழங்கும் முதல் பரிந்துரை இதுவாகும்.

**4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற மைராஜ் அகமத் கானுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ. பளு தூக்குதல்

**ஆ. துப்பாக்கி சுடுதல் ☑**

இ. மல்யுத்தம்

ஈ. டென்னிஸ்

- ✓ கொரியாவின் சாங்வோனில் நடந்த ISSF உலகக்கோப்பையில் இரண்டு முறை ஒலிம்பிக் பதக்கம் வென்றவரும் இந்தியாவின் முன்னணி துப்பாக்கி சுடும் வீரருமான மைராஜ் அகமது கான் நாட்டின் முதல் தனிநபர் தங்கத்தை வென்றார். இன்னும் இரண்டு நாள் போட்டிகள் எஞ்சியுள்ள நிலையில், ஐந்து தங்கம், ஐந்து வெள்ளி மற்றும் மூன்று வெண்கலப்பதக்கங்களுடன் இந்தியா பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. அஞ்சும் மௌத்கில், சிப்ட் கௌர் சாம்ரா மற்றும் ஆஷி சௌக்சே ஆகியோரின் 50 மீ ரைபிள் மகளிர் அணியுடன் இந்தியா வெண்கலம் வென்றது.

**5. முதல் AI அடிப்படையிலான டிஜிட்டல் மக்கள் மன்றத்தைத் தொடங்கியுள்ள இந்திய மாநிலம்/UT எது?**

அ. கேரளா

ஆ. தெலுங்கானா

**இ. இராஜஸ்தான் ☑**

ஈ. ஒடிஸா

- ✓ தேசிய சட்டசேவைகள் ஆணையத்தின் தலைவர் உதை உமேஷ் லலித், இராஜஸ்தானில் நடந்த 18ஆவது அகில இந்திய சட்டசேவைகள் அதிகாரிகளின் கூட்டத்தில் நாட்டின் முதல் AI அடிப்படையில் இயங்கும் டிஜிட்டல் மக்கள் மன்றத்தைத் (லோக் அதாலத்) தொடங்கிவைத்தார். இராஜஸ்தான் மாநில சட்டசேவைகள் ஆணையத்தின் டிஜிட்டல் லோக் அதாலத் இந்தியாவின் பெருகிவரும் நிலுவை வழக்குகளுக்கு இடையில் தொடங்கப்பட்டுள்ளது.

**6. கீழ்க்காணும் எந்த மாநிலத்தின் 17ஆவது பறவைகள் சரணாலயமாக, 'நஞ்சராயன் குளம்' அறிவிக்கப்பட்டுள்ளது?**



**அ. தமிழ்நாடு ☑**

ஆ. கேரளா

இ. ஆந்திரப் பிரதேசம்

ஈ. கர்நாடகா

- ✓ தமிழ்நாட்டின் பதினேழாவது பறவைகள் சரணாலயமாக, 'நஞ்சராயன் குளம்' அறிவிக்கப்பட்டுள்ளது. இது, திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பாதுகாக்கப்பட்ட பறவைகள்சூழ் இடமாகும். சர்க்கார் பெரியபாளையம் நீர்த்தேக்கம் என்று அழைக்கப்படும் நஞ்சராயன் குளத்தில் 220 நீர்க்காக்கைகளும் 165 கூழைக்கடாக்களும் உள்ளன.
- ✓ அங்கு நூற்றுக்கணக்கான வர்ண நாரைகளும் நாமக்கோழிகளும் கூட உள்ளன. 800 ஆண்டுகள் பழமையான இக்குளத்திற்கு, பல நூற்றாண்டுகளாக பறவைகள் வந்து செல்கின்றன. 181 வகையான பறவைகள், 16 வகையான ஊர்வன, 40 வகையான பட்டாம்பூச்சிகள், 11 வகையான பாலூட்டிகள் மற்றும் 76 வகையான தாவரங்கள் அங்கு பதிவுசெய்யப்பட்டுள்ளன.

**7. 'ஹுருன் இந்தியா பியூச்சர் யூனிகார்ன் இன்டெக்ஸ் – 2022'இன்படி, இந்தியாவின் துளிர் நிறுவனங்களின் தலைநகரம் எது?**



அ. சென்னை

**ஆ. பெங்களூரு ☑**

இ. ஹைதராபாத்

ஈ. மும்பை

- ✓ 'ஹுருன் இந்தியா பியூச்சர் யூனிகார்ன் குறியீடு – 2022'இன்படி, பெங்களூரு இந்தியாவின் துளிர் நிறுவல்களின் தலைநகரமாகத் தொடர்கிறது. அந்த நகரத்தில் குறைந்தது 46 துளிர் நிறுவல்கள் இருக்கலாம். அதைத்தொடர்ந்து தில்லி NCR (25), மும்பை (16) ஆகிய நகரங்கள் உள்ளன. இந்தக் குறியீட்டின்படி, அடுத்த இரண்டு அல்லது நான்கு ஆண்டுகளில் இந்தியாவில் 122 புதிய துளிர் நிறுவல்கள் தொடங்கப்படும்.

**8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, யாயர் லாபிட் என்பவர் கீழ்க்காணும் எந்த நாட்டின் புதிய பிரதமராவார்?**



அ. ஆப்கானிஸ்தான்

ஆ. பாகிஸ்தான்

**இ. இஸ்ரேல் ☑**

ஈ. ஈரான்

✓ 58 வயதான யாயர் லாபிட், இஸ்ரேலின் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதை அடுத்து, இஸ்ரேலின் 14ஆம் பிரதமராக அண்மையில் பதவியேற்றார். பத்திரிகையாளராக இருந்து அரசியல்வாதியாக மாறிய யாயர் லாபிட், இஸ்ரேலின் தற்காலிகப் பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார், ஏனெனில் வரும் நவம்பர் மாதத்தில் அந்நாடு பிரதமர் தேர்தலைச் சந்திக்கவுள்ளது. இது நான்கு ஆண்டுகளில் அந்நாடு சந்திக்கும் ஐந்தாவது பிரதமர் தேர்தலாகும். பெஞ்சமின் நெதன்யாகுவின் பன்னிரண்டு ஆண்டுகால ஆட்சிபுரி சாதனையை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கோடு அவர் ஒரு கூட்டணியை உருவாக்கினார்.

**9. நீலாச்சல் இஸ்பாட் நிகாம் லிட் (NINL) ஆனது கீழ்க்காணும் எந்த இந்திய கூட்டுக்குழுமத்திடம் ஒப்படைக்கப்பட்டது?**

அ. ரிலையன்ஸ் குழுமம்

**ஆ. TATA குழுமம் ☑**

இ. அதானி தொழிற்துறைகள்

ஈ. வேதாந்தம்

✓ டாடா ஸ்டீல் லாங் புராடக்ட்ஸ் (TSLP) நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து நீலாச்சல் இஸ்பாட் நிகாம் லிட் இன் (NINL) தனியார்மயமாக்கல் செயல்முறை நிறைவடைந்தது. TATA குழுமத்தால் வாங்கப்பட்ட ஏர் இந்தியா நிறுவனத்தை அடுத்து, இந்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் 2ஆவது வெற்றிகரமான தனியார்மயமாக்கல் ஆகும் இது. NINL, இது MMTC, NMDC, BHEL, MECON ஆகிய நான்கு ஒன்றிய பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் ஒடிசா மாநில அரசாங்கத்தின் இரண்டு பொதுத்துறை நிறுவனங்களான OMC மற்றும் IPICOL ஆகியவற்றின் கூட்டு நிறுவனமாகும்.

**10. உலகின் மிக ஆற்றல்வாய்ந்த துகள் மோதியான, 'லார்ஜ் ஹாட்ரான் கொலைடர்' அமைந்துள்ள இடம் எது?**



அ. நியூயார்க்

**ஆ. ஜெனீவா ☑**

இ. சைபீரியா

ஈ. பாரிஸ்

✓ உலகின் மிக ஆற்றல்வாய்ந்த துகள் மோதியான, 'லார்ஜ் ஹாட்ரான் மோதி', இந்த ஆண்டு ஜூலை முதல் செயல்பட உள்ளது. இது ஜெனீவாவில் அமைந்துள்ள அணுவாராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பால் உருவாக்கப்பட்டது.

✓ 'லார்ஜ் ஹாட்ரான் மோதி' என்பது துகள்களை ஆய்வதற்காகக் கட்டப்பட்ட ஒரு மாபெரும், சிக்கலான எந்திரமாகும். இது இதுவரை அறியப்பட்டதிலேயே மிகச்சிறிய கட்டுமானத்தொகுதிகளை ஆயும். பராமரிப்பு மற்றும் மேம்படுத்தல் பணிகளுக்காக மூடப்பட்டு மூன்றாண்டுகளுக்குப் பிறகு, சமீபத்தில் அது மீண்டும் செயல்பாட்டுக்கு வந்தது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நூலகம் எனும் அறிவுக்கிடங்கு!**

"நான் மறைந்தபிறகு என் உடல்மீது மலர் மாலைகளை வைக்க வேண்டாம்; என் மடிமீது புத்தகங்களைப் பரப்புங்கள்" என்று புத்தகங்கள் மீதான தன் தீராவேட்கையை வெளிப்படுத்தியவர் நாட்டின் முதல் பிரதமரான ஜவாஹர்லால் நேரு. புத்தகங்களால் உயர்ந்தவர்கள் உலகில் பலர் உள்ளனர்.

அதுதான் புத்தகங்களுக்கு உண்டான சிறப்பு. உலகில் புத்தகங்களுக்கு எத்துணை சிறப்பு இருக்கிறதோ அத்துணை பெருமைகொண்டவையாக விளங்குகின்றன நூலகங்கள். அறிவுக்கிடங்காக, அறிவின் புதையலாக அவை தொடர்ந்து இயங்கிவருகின்றன. கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் இணைத்து எதிர்காலத்தை உருவாக்கும் ஆற்றல் மையங்களாக நூலகங்கள் திகழ்கின்றன.

உலகில் உள்ள நூலகங்களின் எண்ணிக்கை 26 லட்சம்

ஆசியாவில் உள்ள நூலகங்களின் எண்ணிக்கை 19 லட்சம்

இந்தியாவில் உள்ள நூலகங்களின் எண்ணிக்கை 15 லட்சம்

அத்தகைய நூலகங்கள் குறித்து ஒரு பார்வை...

**உலகின் முதல் நூலகம்**

* நிறுவப்பட்டது: கி.மு. 7–ஆம் நூற்றாண்டு

* மத்திய கிழக்கின் நினேவா பகுதியில் (தற்போதைய இராக்) அசிரிய ஆட்சியாளர் அசுர்பனிபால் என்பவரால் அமைக்கப்பட்டது.

* பண்டைய மத்திய கிழக்கின் எழுத்துகளால் ஆன சுமார் 30,000 கல்வெட்டுகளையும் பதிவுகளையும் கொண்டிருந்தது.

* அப்போதைய அறிஞர்களின் கட்டுரைகளும் இடம்பெற்றிருந்தன.

**நாகரிகங்களின் நூலகங்கள்**

உலகின் பல்வேறு பகுதிகளில் நாகரிகங்கள் தோன்றி வளர்ந்தபோது நூலகங்களும் வளர்ந்தன.

**அலெக்ஸாண்ட்ரியா நூலகம், எகிப்து**

*கிரீஸ், பாரசீகம் (இன்றைய ஈரான்), எகிப்து, இந்தியா உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் 7,00,000 ஆவணங்கள் இருந்தன.

**கலீஃப் அல்–அகம் நூலகம்**

* இடம்: கோர்டோவா, ஸ்பெயின்

* நிறுவப்பட்டது: 10–ஆம் நூற்றாண்டு

* 4,00,000–க்கும் அதிகமான புத்தகங்கள்

**உலகின் மிகப்பெரும் நூலகங்கள்**

**பிரிட்டிஷ் நூலகம், லண்டன்**

* நிறுவப்பட்டது: 1973

* புத்தகங்கள், இதழ்கள், நாளிதழ்கள் உள்ளிட்டவற்றின் எண்ணிக்கை: 17 கோடி முதல் 20 கோடி வரை

**லைப்ரரி ஆஃப் காங்கிரஸ், வாஷிங்டன், அமெரிக்கா**

* நிறுவப்பட்டது: 1800

* அமெரிக்காவின் தேசிய நூலகமாக உள்ள நாடாளுமன்ற நூலகம்

* புத்தகங்கள் உள்ளிட்டவற்றின் எண்ணிக்கை: 17 கோடி

**ஷாங்காய் நூலகம், சீனா**

* நிறுவப்பட்டது: 1847

* புத்தகங்கள் உள்ளிட்டவற்றின் எண்ணிக்கை: 5.6 கோடி

**இந்தியாவின் முக்கிய, பழைமையான நூலகங்கள்**

**திருவனந்தபுரம் நூலகம், கேரளம்**

* நிறுவப்பட்டது: 1829

* நிறுவியவர்: அரசர் ஸ்வாதி திருநாள்

**சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்**

* நிறுவப்பட்டது: நாயக்க மன்னர்கள் காலம்

நாட்டின் பல்வேறு மொழிகளில் எழுதப்பட்ட அரிய ஓலைச்சுவடிகள் இங்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**கன்னிமாரா நூலகம், சென்னை**

* நிறுவப்பட்டது: 1896

* தேசிய புத்தக களஞ்சியங்களுள் ஒன்று. நாட்டில் வெளியாகும் அனைத்து நூல்கள், இதழ்கள், நாளிதழ்களின் ஒரு பிரதி இங்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**இந்திய தேசிய நூலகம், கொல்கத்தா**

* நிறுவப்பட்டது: 1836

* புத்தகங்களின் எண்ணிக்கை: 26.41 லட்சம்

* நாட்டுக்கு அர்ப்பணிப்பு: பிப்ரவரி 1, 1953

* தேசிய புத்தக களஞ்சியங்களுள் ஒன்று.

**தில்லி பொது நூலகம்**

* நிறுவப்பட்டது: 1951

* புத்தகங்களின் எண்ணிக்கை: 18 லட்சம்.

* ஹிந்தி, ஆங்கிலம், உருது, பஞ்சாபி உள்ளிட்ட பல்வேறு மொழி நூல்கள் உள்ளன.

**சேஷாத்ரி நினைவு நூலகம், பெங்களூரு**

* நிறுவப்பட்டது: 1915

* புத்தகங்களின் எண்ணிக்கை: 3 லட்சம்

* விருது: ராஜா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை விருது (1999–2000)

**2. ஆசிய பளுதூக்குதல்: ஹர்ஷதாவுக்கு தங்கம்**

உஸ்பெகிஸ்தானில் நடைபெறும் ஆசிய யூத் மற்றும் ஜூனியர் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவுக்கு 3 பதக்கம் கிடைத்தது. இதில் மகளிருக்கான 45 கிலோ பிரிவில் இந்தியாவின் அசத்தல் இளம் வீராங்கனை ஹர்ஷதா கௌட் மொத்தமாக 157 கிலோ எடையைத்தூக்கி முதலிடம் பிடித்து தங்கம் வென்றார். அவர் 'ஸ்னாட்ச்' பிரிவில் 69 கிலோ, 'கிளீன் & ஜெர்க்' பிரிவில் 88 கிலோ எடையைத் தூக்கினார். இதே பிரிவில் களம்கண்ட மற்றொரு இந்தியரான சௌம்யா தேவி 145 கிலோ (63+82) எடையைத் தூக்கி வெண்கலப் பதக்கம் பெற்றார்.

இதில் ஹர்ஷதா கௌட் தூக்கிய எடையானது, கடந்த மே மாதம் ஜூனியர் உலக சாம்பியன்ஷிப்பில் தங்கம் வெல்லும் முயற்சியின்போது அவர் தூக்கிய எடையைவிட 4 கிலோ அதிகம் ஆகும்.

இதனிடையே, ஆடவருக்கான 49 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் L தனுஷ், 185 கிலோ (85+100) எடையைத் தூக்கி 4–ஆவது இடம்பிடித்தார். என்றாலும், 'ஸ்னாட்ச்' பிரிவில் அவர் தூக்கிய 85 கிலோ எடைக்காக அவருக்கு அந்தப்பிரிவுக்கான வெண்கலப்பதக்கம் கிடைத்தது. ஆசிய மற்றும் உலக பளுதூக்குதல் சாம்பியன்ஷிப்பில் ஸ்னாட்ச், கிளீன் & ஜெர்க், இரண்டும் சேர்த்து என மூன்று பிரிவுகளுக்கும் தனித்தனியே பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. ஒலிம்பிக்கில் ஒட்டுமொத்தமாக ஒரே பதக்கம் மட்டும் வழங்கப்படுகிறது.

---

**3. பாரத் கௌரவ் இரயில்கள்**

இந்தியாவின் வளமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் வரலாற்று சிறப்புமிக்க இடங்களை இந்திய மற்றும் உலக மக்களுக்கு வெளிப்படுத்தும் நோக்கத்துடன், 'பாரத் கௌரவ் இரயில்கள்' (சுற்றுலா) கொள்கையை இந்திய ரயில்வே அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

இதுவரை இரண்டு பாரத் கௌரவ் இரயில்கள் பின்வரும் பகுதிகளுக்கு இடையே இயக்கப்படுகின்றன.

1) கோயம்புத்தூர்–மந்த்ராலயம்–ஷீரடி–கோயம்புத்தூர்.

2) தில்லி சப்தர்சங்–அயோத்யா–பாக்சர்–சனக்பூர் (நேபாளம்)–வாரணாசி–நாசிக்–ஒஸ்பெட்–ராமேசுவரம்–காஞ்சிபுரம் –பத்ராசலம் சாலை–தில்லி சப்தர்சங்.

இந்தத்தகவலை, மத்திய ரயில்வேத்துறை, தகவல் தொடர்பு மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், இன்று மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

---

**1. 2021–இல் இந்தியக் குடியுரிமையைத் துறந்த இந்தியக்குடிகளின் சிறந்த தேர்வாக இருந்த நாடு எது?**



அ. இங்கிலாந்து


**ஆ. அமெரிக்கா ☑**

இ. ஐக்கிய அரபு அமீரகம்

ஈ. ஜெர்மனி

✓ உள்துறை அமைச்சகம் வழங்கிய தரவுகளின்படி, 2021ஆம் ஆண்டில் 1.63 இலட்சத்திற்கும் அதிகமான இந்தியக் குடிமக்கள் தங்களின் இந்தியக்குடியுரிமையை துறந்துள்ளனர். இது கடந்த 3 ஆண்டுகளில் மிகவதிகமானதாகும். அதில் சரிபாதி இந்தியர்கள் அமெரிக்கக் குடிமக்களாக மாற விரும்புவதால் அமெரிக்காவே முதன்மையான தேர்வாக உள்ளது. அமெரிக்காவை அடுத்து ஆஸ்திரேலியா, கனடா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இந்தியர்கள் குடியுரிமை பெற விரும்புகின்றனர்.

**2. ஆண்டுதோறும், 'சர்வதேச நிலவு நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?**



அ. ஜூலை.18

**ஆ. ஜூலை.20 ☑**

இ. ஜூலை.22

ஈ. ஜூலை.23

✓ ஐக்கிய நாடுகள் பொது அவையானது, 'சர்வதேச நிலவு நாளானது' ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.20ஆம் தேதியன்று கொண்டாடப்படும் என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. கடந்த 1969ஆம் ஆண்டில் நிலவில் மனிதர்கள் முதன் முதலில் இறங்கிய நாளைக் கொண்டாடும் விதமாக இந்த அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. 1969ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் தேதியன்று அப்பல்லோ 11 என்ற செயற்கைக்கோள் நிலவில் தரையிறங்கியது. இந்த நிலவுப் பயணத்தின் வலவனான எட்வின் ஆல்ட்ரின் 19 நிமிடங்கள் கழித்து நீல் ஆம்ஸ்ட்ராங்கைப் பின்தொடர்ந்து சுமார் இரண்டே கால் மணி நேரம் விண்கலத்திற்கு வெளியே இருந்தனர். அவர்கள் 21.5 கிலோ நிலவுப்பொருட்களைச் சேகரித்தனர்.

**3. திறன்மேம்பாட்டு ஆணையமானது சமீபத்தில் எந்த நிறுவனங்களுக்காக தேசிய தரநிர்ணயக் கட்டமைப்பை உருவாக்கியது?**



அ. வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள்

**ஆ. குடிமைப்பணிகள் பயிற்சி நிறுவனங்கள் ☑**

இ. உயர்கல்வி நிறுவனங்கள்

ஈ. MSME-கள்

✓ குடிமைப்பணிகள் பயிற்சி நிறுவனங்களுக்கான தேசிய தரநிர்ணயக் கட்டமைப்பை (National Standards for Civil Service Training Institutions – NSCSTI) நடுவண் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் Dr ஜிதேந்திர சிங் தொடங்கிவைத்தார். தேசிய அளவில் குடிமைப்பணிகளுக்கான பயிற்சிகளை அளிக்கும் நிறுவனங்க –ளுக்கான தரநிர்ணயத்தை உருவாக்க, திறன் மேம்பாட்டு ஆணையத்தால் தரநிலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**4. ரிசர்வ் வங்கியானது கீழ்க்காணும் எந்த நிறுவனங்களுக்கான நான்கு அடுக்கு ஒழுங்குமுறை கட்டமைப்பை ஏற்றுக்கொண்டுள்ளது?**

அ. தொடக்க வேளாண் சங்கங்கள்

**ஆ. நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் ☑**

இ. ஊரக கூட்டுறவு வங்கிகள்

ஈ. நிதி நிறுவனங்கள்

भारतीय रिज़र्व बैंक
RESERVE BANK OF INDIA

✓ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளுக்கு (UCB) எளிய நான்கு அடுக்கு ஒழுங்குமுறை கட்டமைப்பை ஏற்க முடிவுசெய்துள்ளது. இந்தக் கட்டமைப்பானது வைப்புத்தொகைகளின் அளவை அடிப்படையாகக்

கொண்டது; அவற்றின் நிதியியல் உறுதித்தன்மையை வலுப்படுத்தும் நோக்கத்துடன் இது இருக்கும். இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் NS விஸ்வநாதன் தலைமையிலான நிபுணர் குழு, UCB–களை வலுப்படுத்த வேண்டி பல்வேறு பரிந்துரைகளை வழங்கியது.

**5. கண்காணிப்பு சாதனம் பொருத்தப்பட்ட அனைத்து வணிக ரீதியிலான வாகனங்களையும் Emergency Response Support System (ERSS) உடன் இணைக்கும் முதல் இந்திய மாநிலம் எது?**

அ. குஜராத்

**ஆ. ஹிமாச்சல பிரதேசம் ☑**

இ. புது தில்லி

ஈ. ஹரியானா

- ✓ வாகன இருப்பிட கண்காணிப்பு சாதனம் பொருத்தப்பட்ட மற்றும் பதிவுசெய்யப்பட்ட அனைத்து வணிகரீதியிலான வாகனங்களையும் Emergency Response Support System (ERSS) உடன் இணைக்கும் நாட்டின் முதல் மாநிலமாக ஹிமாச்சல பிரதேசம் ஆனது. இதன்மூலம் இவ்வாகனங்களை VLTDமூலம் நாட்டில் எங்கிருந்து வேண்டுமானாலும் காவல்துறை மற்றும் போக்குவரத்துத்துறையால் கண்காணிக்க முடியும்.
- ✓ அவசரநிலை பொத்தானை அழுத்தினால், செயற்கைக்கோள்மூலம் 112–க்கு ஒரு சமிக்ஞை அனுப்பப்படும். அதன்பின் இடரிலிருப்பவர் இணைக்கப்பட்டு காவல்துறைக்கு தகவல் அளிக்கப்படும்.

**6. '15 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப்பில்' இந்தியாவின் நிலை என்ன?**

அ. முதலாவது

**ஆ. மூன்றாவது ☑**

இ. ஐந்தாவது

ஈ. பத்தாவது

- ✓ 15 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப்பில் ஈரான் ஆசிய பட்டத்தை வென்றது; கஜகஸ்தான் இரண்டாம் இடத்தைப் பிடித்தது. இந்தியா 172 புள்ளிகளுடன் 3ஆமிடத்தைப் பிடித்தது. பக்ரைனில் நடைபெற்று வரும் 15 வயதுக்குட்பட்ட கிரேக்க ரோமன் மல்யுத்தப் போட்டியில் இந்திய அணி இரண்டு தங்கம், இரண்டு வெள்ளி மற்றும் நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்றது. 68 கிலோ பிரிவில் சச்சினும், 72 கிலோ எடைப்பிரிவில் அபையும் அந்தந்தப் பிரிவுகளில் தங்கப்பதக்கங்களை வென்றனர்.

**7. அண்மைச் செய்திகளில் இடம்பிடித்த, 'ARYABHAT–1' என்றால் என்ன?**

அ. எறிகணை

ஆ. புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்

**இ. அனலாக் சிப்செட்டின் முன்மாதிரி ☑**

ஈ. மீத்திறன் கணினி



- ✓ இந்திய அறிவியல் கழகத்தின் (IISc) ஆராய்ச்சியாளர்கள் அடுத்த தலைமுறை அனலாக் கம்ப்யூட்டிங் சிப்செட்களை உருவாக்குவதற்கான வடிவமைப்பு கட்டமைப்பை உருவாக்கியுள்ளனர். அம்முன்மாதிரிக்கு ARYABHAT–1 (Analog Reconfigurable Technology and Bias–scalable Hardware for AI Tasks) என்று பெயரிடப்பட்டுள்ளது. அதன் சில்லுத் தொகுதிகளை மறுகட்டமைக்கப்பட்டு நிரல்படுத்தி மீண்டும் பயன்படுத்தலாம்; இதனால் ஒரே அனலாக் தொகுதிகளை வெவ்வேறு தலைமுறை வடிவமைப்பு மற்றும் வெவ்வேறு பயன்பாடுகளில் பயன்படுத்த முடியும்.

**8. ஒவ்வோர் ஆண்டும், 'உலக ஜூனோசிஸ் நாள்' கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

அ. ஜூலை.02

ஆ. ஜூலை.04

**இ. ஜூலை.06 ☑**

ஈ. ஜூலை.08




✓ விளங்கிலிருந்து மனிதர்க்குப்பரவும் தொற்றுநோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் ஜூலை.6ஆம் தேதி உலக ஜூனோசிஸ் நாள் உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது. 1885 ஜூலை.6 அன்று முதன்முதலில் ரேபிஸ் தடுப்பூசியை வெற்றிகரமாக செலுத்திய பிரெஞ்சு உயிரியலாளர் லூயி பாஸ்டரின் நினைவாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது. ஜூனோடிக் நோய்கள் விலங்குகளில் தோன்றி மனிதர்களுக்கும் பரவும்.

**9. 'Mind Master: Winning Lessons from a Champion's Life' என்பது யாரின் நினைவுக்குறிப்பாகும்?**

அ. மேக்னஸ் கார்ல்சன்

**ஆ. விஸ்வநாதன் ஆனந்த் ☑**

இ. இரகுராம் இராஜன்

ஈ. இரஜினிகாந்த்



✓ 'Mind Master: Winning Lessons from a Champion's Life' என்பது செஸ் மேதையும் 5 முறை உலக செஸ் சாம்பியனும் ஆன விஸ்வநாதன் ஆனந்தின் நினைவுக்குறிப்பாகும். அண்மையில், 44ஆவது FIDE செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கு முன்னதாக, இந்நூலின் மென்னட்டை பதிப்பை வெளியிடுவதாக 'Hachette India' அறிவித்தது. தொற்றுகாலத்திற்குப் பிறகு, நிச்சயமற்ற தன்மை மற்றும் விரைவாக மாறிவரும் யதார்த்தங்களை எவ்வாறு கையாளுவது என்பது குறித்த மேலதிக அத்தியாயத்தையும் இந்த நூல் கொண்டுள்ளது.

**10. அண்மைச் செய்திகளில் இடம்பிடித்த, ஓன்ஸ் ஜபேர் என்பவருடன் தொடர்புடைய துறை எது?**

**அ. விளையாட்டு ☑**

ஆ. வணிகம்

இ. அறிவியல்

ஈ. அரசியல்



✓ துனிசியாவைச் சார்ந்த உலகின் நெ:2 டென்னிஸ் வீராங்கனை ஓன்ஸ் ஜபேர், விம்பிள்டனில் செக் குடியரசின் மேரி பௌஸ்கோவாவை தோற்கடித்து கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் அரையிறுதியை எட்டிய முதல் அரபு அல்லது வட ஆப்பிரிக்க பெண்மணி என்ற பெருமையைப் பெற்றார். 27 வயதான டென்னிஸ் வீராங்கனையான ஓன்ஸ் ஜபேர் உலக தரவரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிமீது தடை**

காது சுத்தப்படுத்தும் பஞ்சு பொருத்திய நெகிழிக்குச்சிகள், பலூன்களுக்கான நெகிழிக்குச்சிகள், நெகிழிக்கொடிகள், மிட்டாய் பொருத்தும் நெகிழிக்குச்சிகள், ஐஸ்கிரீம் பொருந்திய நெகிழிக்குச்சிகள், அலங்காரத்திற்கான தெர்மாகோல் ஆகியவையும் நெகிழித்தட்டுகள், கிண்ணங்கள், குவளைகள், கரண்டிகள், கத்திகள், உறிஞ்சுக்குழல், இனிப்பு பெட்டிகளில் சுற்றப்படும் அல்லது பேக் செய்யப்படும் நெகிழி, அழைப்பிதழ்கள், சிகரெட் பெட்டிகள் ஆகியவற்றில்

பயன்படுத்தப்படும், 100 மைக்ரானுக்கு குறைவாகவுள்ள நெகிழி (அ) PVC பதாகைகள் ஆகியவற்றை தயாரிப்பது, இறக்குமதி செய்வது, இருப்பு வைப்பது, விநியோகிப்பது, விற்பனை செய்வது, பயன்படுத்துவது ஆகியவற்றுக்கு தடைவிதிக்கும் நெகிழிக்கழிவு நிர்வாக சீர்திருத்த விதிகள், 2021-ஐ, ஆகஸ்ட் 12 அன்று மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலைமாற்ற அமைச்சகம் அறிவித்தது.

75 மைக்ரானுக்கும் குறைவான தடிமனுள்ள நெகிழிப்பைகள் தயாரிப்பு, இறக்குமதி, இருப்பு வைத்தல், விநியோகம், விற்பனை மற்றும் பயன்பாட்டுக்கும் தடைவிதித்தும் 2021 செப்டம்பர் 30 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் 120 மைக்ரானுக்கும் குறைவான தடிமனுள்ள நெகிழிப்பொருட்களுக்கு 2022 டிச.31 முதல் தடை விதிக்கப்பட உள்ளது. நெகிழிப்பைகள் (அ) ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிப்பொருட்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றை தடைசெய்வதற்கான அறிவிப்புகளை ஏற்கனவே 34 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் வெளியிட்டுள்ளன.

---

**2. நாட்டில் கடற்கரைகளுக்கான நீலக்கொடி தரநிலைச் சான்றுகள்**

ஒருங்கிணைந்த கடற்கரை பகுதி நிர்வாக திட்டத்தின்கீழ் சுற்றுச்சூழல் வன மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் கடற்கரை, சுற்றுச்சூழல் மற்றும் அழகியல் நிர்வாக சேவைகள் திட்டத்தை முன்னெடுத்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் மாசுக்கட்டுப்பாடு, கடற்கரை விழிப்புணர்வு, அழகியல், பாதுகாப்பு கண்காணிப்பு பணிகள், சுற்றுச்சூழல் கல்வி தொடர்பான பல்வேறு பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. நீலக்கொடி கடற்கரை சான்றிதழுக்காக சர்வதேச தரநிலைகளை எட்டுவதை நோக்கமாககொண்டு தெரிவான கடற்கரைகளில் இந்தப்பணிகள் செய்யப்படுகின்றன.

மிகச்சிறந்த சர்வதேச கடற்கரைகளுக்கு இணையாக மேம்படுத்த 6 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் மொத்தம் 10 கடற்கரைகள் தேர்வுசெய்யப்பட்டுள்ளன. இவற்றில் தமிழ்நாட்டில் உள்ள காஞ்சிபுரம் மாவட்ட கோவளம் கடற்கரையும், புதுச்சேரியின் ஈடன் கடற்கரையும் அடங்கும்.

---

**3. ஜல் சக்தி இயக்கம்**

ஜல்சக்தி இயக்கம்-I திட்டம், 2019-ல், 1592 வட்டாரங்களில், நாட்டின் 256 வறட்சியான மாவட்டங்களில், நீர் பாதுகாப்பு மற்றும் நீர் வள மேலாண்மையை மேம்படுத்துவதற்காக, 5 திட்டங்களை துரிதமாக செயல்படுத்துதற்காக தொடங்கப்பட்டது. நீர்ப்பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு, பாரம்பரிய மற்றும் பிற நீர்நிலைகளை புதுப்பித்தல், நீரை மறுசுழற்சி செய்தல், நீர்நிலைகள் மேம்பாடு மற்றும் தீவிர காடு வளர்ப்பு மேலும் வட்டார மற்றும் மாவட்ட நீர் பாதுகாப்புத் திட்டங்களில் சிறப்பு கவனம் செலுத்துதல், கிருஷி அறிவியல் கேந்திரா திட்டங்கள், நகர்ப்புற கழிவுநீர் மறுபயன்பாடு மற்றும் அனைத்து கிராமங்களையும் முப்பரிமாண தொழில்நுட்பம் மூலம் கண்காணித்தல் ஆகியவை அடங்கும்.

பின்னர் ஜல் சக்தி இயக்கம் 2019-ல் விரிவுப்படுத்தப்பட்டு, "ஜல் சக்தி இயக்கம்: மழைநீரைச்சேகரி, மழைநீரைப்பிடி - எங்கே விழுந்தாலும், எப்போது விழுந்தாலும்" என்ற கருப்பொருளுடன், அனைத்து மாவட்டங்கள், வட்டாரங்களையும் உள்ளடக்கியதாக விரிவுப்படுத்தப்பட்டது.

---

**4. அடல் நிலத்தடி நீர் மேலாண்மை திட்டம்**

அடல் நிலத்தடி நீர் மேலாண்மைத் திட்டமானது குஜராத், ஹரியானா, கர்நாடகா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, இராஜஸ்தான் மற்றும் உத்தர பிரதேசம் ஆகிய ஏழு மாநிலங்களில், எண்பது மாவட்டங்களிலுள்ள 8,562 கிராமப் பஞ்சாயத்துகளில் நிலையான நிலத்தடிநீர் மேலாண்மையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகிறது. நிலத்தடிநீர் மேலாண்மை திட்டத்தை மேம்படுத்த மத்திய, மாநில அரசுகளின் செயல்பாடுகள்குறித்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்மூலம் மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அடல் நிலத்தடி நீர் மேலாண்மைத் திட்டம் 01.04.2020 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

---

**5. NITI ஆயோக்கின் இந்திய புதுமை கண்டுபிடிப்புகள் 2021 பட்டியலில் கர்நாடகா, மணிப்பூர், சண்டிகர் ஆகியவை முன்னணியில் உள்ளன**

NITI ஆயோக்கின் இந்திய புதுமை கண்டுபிடிப்புகள் 2021 பட்டியலின் மூன்றாவது பகுதியில் கர்நாடகா, மணிப்பூர், சண்டிகர் ஆகியவை தங்களது பிரிவில் முன்னணியில் உள்ளன.

இதுகுறித்த பட்டியலை NITI ஆயோக்கின் துணைத்தலைவர் சுமன் பெரி வெளியிட்டார்.

பெரிய மாநிலங்கள் பிரிவில் கர்நாடகா மீண்டும் முதலிடத்தையும், வடகிழக்கு மற்றும் மலைப்பிரதேச மாநிலங்கள் பிரிவில் மணிப்பூரும், யூனியன் பிரதேசங்கள் பிரிவில் சண்டிகரும் முதலிடம் வகிக்கின்றன. மாநிலங்கள் பிரிவில் தமிழ்நாடு 15.69 புள்ளிகளுடன் ஐந்தாம் இடத்தில் உள்ளது. தெலங்கானா, ஹரியானா, மகாராஷ்டிரா, பஞ்சாப், உத்தர பிரதேசம், கேரளா, ஆந்திர பிரதேசம், ஜார்க்கண்ட் மாநிலங்கள் முதல் பத்து இடத்தில் இடம்பெற்றுள்ளன.

---

**6. மாதத்தவணையை செலுத்த 'நம்ம குடியிருப்பு' செயலி அறிமுகம்**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புதாரர்கள் தவணைகளை எளிய முறையில் செலுத்தும் வகையில் 'நம்ம குடியிருப்பு' என்ற புதிய செயலியை அந்தத் துறையின் அமைச்சர் தா மோ அன்பரசன் (ஜூலை 20) அன்று தொடக்கி வைத்தார்.

இந்தச் செயலியில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புதாரர்கள் வாரியத்துக்குச் செலுத்த வேண்டிய தவணைகளை எளிய முறையில் செலுத்தலாம். இந்தச் செயலியை கைப்பேசியில் பதிவிறக்கம் செய்து வாரியத்துக்குச் செலுத்தவேண்டிய மாதத்தவணைத்தொகை, பராமரிப்புத்தொகை, நிலுவைத்தொகை போன்றவற்–றை செலுத்தலாம்.

---

**7. சிறு ஜவுளி பூங்கா அமைக்க மானியம்: தமிழக அரசு அறிவிப்பு**

சிறிய அளவிலான ஜவுளி பூங்காக்களை அமைக்கும் திட்டத்துக்கு மானியம் வழங்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து கைத்தறி மற்றும் துணிநூல் துறை வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாட்டில் ஜவுளி துறையின் கட்டமைப்பை வலுப்படுத்த அரசு செயல்படுத்தி வரும் பல திட்டங்களில் சிறிய அளவிலான ஜவுளி பூங்கா ஏற்படுத்தும் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தின்கீழ், குறைந்தபட்சம் 2 ஏக்கர் பரப்பில் 3 ஜவுளி உற்பத்தி தொழிற்கூடங்கள் அமைக்கப்பட வேண்டும். தகுதிவாய்ந்த திட்ட மதிப்பில் 50 சதவீதம் அல்லது ₹2.50 கோடி என இரண்டில் எது குறைவோ அது தமிழ்நாடு அரசின் மானியமாக வழங்கப்படுகிறது.

சிறிய அளவிலான ஜவுளி பூங்காக்கள் அமைப்பதன் மூலம் நடுத்தர நிறுவனங்களின் வழியாக தொழில் வளர்ச்சி ஏற்பட்டு வேலைவாய்ப்பு பெருகும்.

---